# வானவில்

ஜனவரி 1971

கலவை 1
வர்ணம் 6

தெணியான்



LUCKSHMI STORES.
General Merchants & News Agent
NELLIADY.

VANAVIL

சதம் 35

தெணியான்


எமது உளம் கனிந்த

**புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துக்கள்**

அனைவருக்கும் உரித்தாகுக.

நங்கையர் விரும்பும் நவநாகரீக

**நகைகளுக்கும் வைரங்களுக்கும்**

புகழ்பெற்று விளங்கும் ஸ்தாபனம்

# கே. என். எம்

# மீரான் சாஹிப்

**"தங்கப்பவுண் நகை மாளிகை"**

தொலைபேசி : 585

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

*Visit :*

# *K. N. M. Meeran Sahib*

JEWELLERS & DIAMOND MERCHANTS.

**"SOVEREIGN PALACE"**

DIAL ; 585

Kannathiddy, JAFFNA.

(Ceylon)


எமது உளம் கனிந்த

புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துக்கள்.

இலங்கையின் உயர்தர தயாரிப்பும்
நீடிய உறுதியும் கொண்ட ஓடுகள்

சகாய விலையில் கிடைக்குமிடம்.







புலி மார்க் → ஓடுகளுக்கு ← முயல் மார்க்

ஏக விநியோகஸ்தர்கள்:

# மு. தா. பொன்னம்பலம்

**36, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

எமது இதயம் கனிந்த

புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துக்கள்.

உங்கள் உடைகளுக்கு
நிகரற்ற வெண்மை தருவது சிக்கனமானது!




## லாலா
## நீல
## சோப்

லாலா சோப் தொழிற்சாலை,

அச்சுவேலி.

## வையகம் மகிழும் தையாம் பொங்கல்

வையகம் வாழ வேண்டுமென்ற மனமே கொண்ட நல்லுழவன்
கையின் உழைப்பு கழனிகளில் கவினாய் ஓங்கிக் கதிராகத்
தெய்வம் மழையாய் அருளீந்தே உய்யும் ஒருநாள் உவகையுற
தையும் பிறந்தாள், தமிழில்லம் '' தைதை '' யென்றே பொங்கிற்றாம்.

இ. நாகராஜன்

ஜனவரி
1971

# வானவில்



பொங்கல் திருநாளைக் கொண்டாடும் பெருமக்கள் கரங்களில்
வானவில் தவழ்ந்து தனது இதயங் கனிந்த வாழ்த்துக்களை
அன்பு கூர்ந்த வாசகர்களுக்கு அளிக்கின்றது.

## இதோ ! மாணவர்களுக்கான ஒரு போட்டி.

பாடசாலை மாணவர்களின் இலக்கிய ஆற்றலை ஊக்குவிக்கும் நோக்குடன் ''வானவில்'' கட்டுரைப் போட்டி ஒன்றை நடாத்த முன்வந்துள்ளது.

போட்டிக்குரிய தலைப்புகளும் விண்ணப்பப் படிவமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. சிறந்த கட்டுரைகள் இரண்டுக்கு ரூபா பத்து வீதம் பரிசாக வழங்கப்படும். ஒருவர் எத்தனை கட்டுரைகளும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு கட்டுரையுடனும் தனித்தனி விண்ணப்பப் பத்திரம் இணைக்கப்படல் வேண்டும்.

போட்டிக்குரிய தலைப்புகள் :—

1. எனது அதிபர் அல்லது கடற்கரை கற்றுத்தந்தவை என்ன?
2. நான் விரும்பிப் படித்த நூல் அல்லது நான் விரும்பும் பெரியார்

விண்ணப்பப் படிவம் :

பெயர் : ..........................................................

விலாசம் : ..........................................................

பாடசாலை : ..........................................................

வயது : .................................... வகுப்பு : ....................

வகுப்பு ஆசிரியரின் உறுதியுரை : இக்கட்டுரை மேற்கண்ட மாணவரின் சொந்த முயற்சியாகும்,

.................................... ....................................
மாணவரின் கையொப்பம் ஆசிரியரின் கையொப்பம்

கட்டுரைகளை நீண்ட தபாலுறையிலிட்டு 30-2-71க்கு முன்பதாக ஆசிரியர், ''வானவில்'' 9, மொம்ஸாக் பில்டிங், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். தபால் உறையின் இடது பக்க மூலையில் கட்டுரைப் போட்டி இல 1. எனக் குறிப்பிடல் வேண்டும்,

---

அன்பார்ந்த வாசகர்களே !

எண்பது சதம் பெறுமதியான தபால் முத்திரைகளுடன் உங்கள் முகவரியை தெளிவாக எழுதி அனுப்பினால் உள்நாட்டு வெளிநாட்டு நண்பர்களின் முகவரிகளை நேரடியாக வானவில் இதழுடன் அனுப்பி வைப்போம்.

**வானவில் நட்பு மன்றம்**

பெயர் : ..........................................

விலாசம் : ..........................................

..........................................

நீங்கள் விரும்பும் நாட்டின் பெயர்

..........................................

..........................................

அங் இல: .................... ஒப்பம்

அனுப்பவேண்டிய முகவரி:

**"வானவில்"**
**நட்பு மன்றம்**
**9, மொம்ஸாக் பில்டிங்**
**ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

# மல்லிகை மொட்டு

பி. எட்வேட்

அன்று காலை நோயாளர்களைப் பரிசோதித்து அனுப்பிவிட்டு, சற்று ஓய்வுடன் நாற்காலியில் சாய்ந்து கொண்டேன்.

பலகனி வழியாக வீசும் மென்காற்று உடலுக்கு இதமளித்தது. நிம்மதியாக என் சிந்தனை சில நிமிடங்கள் கழிந்திருக்கும்.

''டாக்டர்''

எங்கோ கிணற்றின் ஆழத்திலிருந்து கேட்பது போன்ற குரல். என் சிந்தனைக் குதிரையின் லாகானைப் பிடித்துஇழுத்து நிறுத்தியபடி நிமிர்ந்து பார்த்தேன்...

என்ன அதிசயம்?

சாந்தா என்முன் நின்றாள். விவாகமாகி நாலு நாள் கூட ஆகவில்லை. புதுமணப் பெண் தனித்து ஒரு வைத்தியசாலைக்கு வருவதா?

கேள்வி அலையெடுக்க நிமிர்ந்து அவளைப் பார்த்தபடி.... ''சாந்தா? நீயா, கல்யாணம் ஆகி நான்கு நாட்கள் கூட ஆகவில்லை அதற்குள் எங்கே புறப்பட்டாய்? யாரையாவுதல் அனுப்பியிருக்கலாமே, நீயேன் வர வேண்டும். ஆட்சொல்லி அனுப்பியிருந்தால் நானே உன் வீட்டுக்கு வந்திருப்பேனே...,?

அவளை ஏற்கனவே எனக்குத் தெரிந்திருந்தமையே இவ்வாறு நான் கேட்பதற்குக் காரணமாகும்.

''என் உடம்பில் ஒரு வியாதியுமில்லை டாக்டர். உங்களை ஒருமுறை பார்த்துப் போகலாம் என்று வந்தேன். நான் தனித்து வரவில்லை. என்னுடைய மச்சாளும் கூட வந்திருக்கிறாள்.

அப்படியா?

இவ்வாறு கேட்டுக் கொண்டேன். ஆனாலும் அவளின் வருகைக்குரிய காரணத்தை அறிய மனம் கட்டற்று பாய்ந்தது.

நான்கு நாட்களுக்கு முன்னர் நடைபெற்ற அவளது விவாகத்துக்கு நானும் சென்றிருந்தேன்.

பிரமாண்டமான பந்தல். மணிமாலைகள், கடதாசித் தோரணங்கள், பூக்களால் சோடிக்கப்பட்ட பந்தலது. அழகான மணவறைகள் யாவும் என் மனக்கண் முன் இப்போது நிழலாடின.

சாந்தாவின் தாய் தகப்பன் உற்றார் உறவினர்களுக்கு நானே வைத்தியம் செய்கின்ற காரணத்தால் என்னைக் கௌரவமாக வரவேற்றனர்.

குறை எங்கே உள்ளது?

சாந்தா ஏன் இப்படி நோய் இல்லாமல் இங்கு வந்தாள்...?

சாந்தா! என்று மீண்டும் விளித்தேன்.

சாந்தாவின் உதடுகள் வார்த்தைகளை உருவாக்க முடியாத நிலையில் தவிப்பதை என்னால் ஊகிக்க முடியாமல் இல்லை. சாந்தாவின் நெற்றியில் வழமையாக இருக்கும் குங்குமப் பொட்

டைக் காணவில்லை; புன் சிரிப்பைக் காணவில்லை. கொண்டையில் உள்ள மல்லிகைப்பூ மாலையைக் காணவில்லை. பதிலுக்கு விரியாத சில மல்லிகை மொட்டுகளை கொண்டையில் குத்தியிருந்தாள்.

''என்ன நடந்தது? சொல்லம்மா பயப்படாமல்!''

''அவர்....''

''எங்கே அவர்?''

'போய்விட்டார் டாக்டர்''

''மூன்று நாளைக்குள் என்ன வந்தது?'' என் ஆவலைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

''எங்கள் கலியாண வீட்டு மூன்றும் நாள் நீங்கள் வந்தீர்களே டாக்டர்! அப்போது அவர் உங்கள் முன் வர மறுத்து விட்டார். உங்களுக்குத் தெரியுமா?'' என்றாள் சாந்தா.

'இல்லை' என்றேன்.

என்னை அவர் ''டாக்டர் மாலை கொண்டு வந்திருப்பாரோ!'' என்று கேட்டார்.

''தனிமையாக வந்திருப்பதால் நிச்சயம் மாலை கொண்டு வந்திருக்க மாட்டார். அவரின் சம்சாரம் பூமணி அக்கா வராத் துப்பலைக்கு தாய் வீட்டிற்குப் போயிருக்கிறா. நீங்கள் பயப்பட வேண்டாம். ஏதாவது அன்பளிப்பு சாமான் தரக்கூடும். நான் அதை வாங்குகிறேன்.'' எனக் கூறினேன்.

''அவர் உங்கள் முன்னிலையில் வர மறுத்ததற்குக் காரணம் சரியான வெறி'' என்று கூறிவிட்டு, வழிந்து கொண்டிருக்கும் கண்ணீரை தாவணிச் சேலையால் ஒத்தினாள் சாந்தா. எனக்கு ஒரு கோணத்தே ஆத்திரமும், மறு கோணத்தே சாந்தாவின் கணவன் கேதீஸ்வரன் மீது வெறுப்பும் மாறிமாறி என் உள்ளத்தே குமுறின.

கேதீஸ்வரன் ஓர் ஆசிரியன். தன்னால் முடிந்தவரை பாடசாலையின் வளர்ச்சிக்கு - மாணவ-மாணவியர்களின் முன்னேற்றத்திற்கு தன் முழு நேரத்தையும் செலவழித்தான். தனது சொந்தக் கிராமத்தில் ஓர் பாடசாலையில் கேதீஸ்வரன் ஆசிரியராகப் பணி புரிந்தான்.

''கேதீஸ்வரன் ஒரு குடிகாரனாக மாறி விட்டானா சாந்தா? இதை நீங்கள் முன்பே அறிந்திருக்கவில்லையா? இந்த நிலைக்கு யார் ஆக்கினார்கள்? ஒரு ஆசிரியன் கேவலம் அதுவும் கலியாண வீட்டு மூன்றும் நாள்...''

''திருமண நாள் அன்று இரவு ஏழு மணியிருக்கும், என்னை வரும்படி கையசைத்தார். 'ஏன் வரச் சொன்னீங்க' என்று கேட்டேன். 'ஒரு கிளாஸ் தாரும்' என்றார். நான் குசினிக்குள் இருந்தவர்கள் எவருக்கும் தெரியாமல் கிளாசை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தேன். பின்பு இவர் எங்கு சென்றார் என்பது எனக்குத் தெரியாது. கார்கள் வீதியின் இருமருங்கிலும் நிறுத்தப்பட்டிருந்தன.

பத்து மணியிருக்கும், திரும்பவும் வரும்படி கையசைத்தார். நான் அவரிடம் சென்றேன். அவர் எதுவும் பேசவில்லை. கிளாசை என்னிடம் மீண்டும் தந்தார். நான் கிளாசை முகர்ந்து பார்த்தேன், சாராயம் மணத்தது....''

சாந்தா இவ்வாறு தொடர்ந்து கூறிக் கொண்டிருக்கும் போது ஒரு நோயாளி குறுக்கிட்டு 'நான் அவசரம் பஸ்ஸுக்கு போக வேண்டும், எனக்கு மருந்தைத் தந்தீர்களானால்!' அந்த நோயாளி கூறி முடிப்பதற்கு முன்பே அந்த நோயாளியைப்

பரீட்சித்தேன். மருந்து கொடுத்தனுப்பியதும் சாந்தா தன் கதையை தொடர்ந்தாள்.

''இரவு பத்தரை மணிக்கு இராச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு ஆண்கள் பந்தலுக்குள்ளேயும் பெண்கள் எங்கள் வீட்டு விருந்தையிலும் படுக்க ஆரம்பித்தார்கள். அவரின் தங்கை கேதா எனக்குப் பக்கத்தே வந்திருந்து,

''அண்ணி! அம்மா உங்களைச் சாப்பிட வரட்டுமாம்'' என்று கூறினுள்.

''உம்முடைய அண்ணர்!'' என்று கேட்டேன்.

''அவர் இப்ப சாப்பிடவில்லையாம். சாப்பிடவும் மாட்டாராம், அதனுல்தான் அம்மா உங்களைக் கூட்டி வரச் சொன்னு. ஒருஅண்ணர் கிளாக்ஆக இருக்கிருர். மற்ற இளையண்ணன் ஆஸ்பத்திரியில் அப்போதிக்கரியாக இருக்கிருர். அதாலை சம்பிரதாயப்படி அவர்களுக்கு பாட்டி வைச்சே தீரவேணும், இல்லாவிட்டால் மதிப்பில்லை. நீங்கள் வாருங்களேன் அண்ணி!'' என்று கெஞ்சிக் கேட்டாள், ஒரு குழந்தை முட்டாசு வாங்க காசு தரும்படி தாயைக் கேட்பது போல.

''அவரும் வரட்டும், பின்பு சாப்பிடலாம், எனக்கு பசிக்கவில்லை கேதா'' என்று கூறினேன்.

''அவர் வந்த பிறகுதான் சாப்பிட வேணுமா? நீங்கள் வாங்க அண்ணி!'' என்று அழைத்தாள். இருவரும் வீட்டுக்கு உள்ளே சென்றேம். சில நிமிடங்கள் சென்றதும் கேதா வெளியே சென்று விட்டாள்.

என்னுல் இருக்கவே முடியவில்லை, படுத்திருந்தேன். சில நிமிடங்கள் கழித்து அவர் உள்ளே வந்தார். அவருக்கு சுய உணர்வில்லை. இரண்டாம் நாளும் இவ்வாறே............ மூன்ரும் நாள் எங்கள் வீட்டுக்கு வந்துசேர்ந்தோம். அன்றுதான் நீங்கள் வந்தீர்கள். நீங்கள் சில வேளை மாலை போட்டால் உங்களுக்கு சாராயம் மணத்துவிடுமோ என பயந்துதான் உங்களோடு பேசாதிருந்தார்.

குத்து விளக்கொன்றை எமக்கு அன்பளிப்புச் செய்துவிட்டு நீங்கள் வந்து விட்டீர்கள். அந்த குத்து விளக்கில் தீபம் ஏற்றி வைக்கவேண்டியது பெண்தான், ஆனுல் அதற்கு நான் கொடுத்து வைக்கவில்லை டாக்டர்.

''நான் வந்த அன்றிரவு''

''அன்று எந்நேரம் படுத்தார், எங்கு படுத்தார் என்பது

## பூமி பனிப் பாறையாகும்.

இன்னும் ஐம்பதாயிரம் மிலியன் ஆண்டுகளுக்குப் பின் பூமி எப்படி இருக்கும் என்று அவதானிகள் கூறுவதைக் கேட்க ஆச்சரியமாக இருக்கிறது. சந்திரன் பூமிக்கு மிக அருகில் வந்துவிடும். பூமியில் உயிரினங்கள் இருக்க மாட்டா. சூரியன் வெகு தூரத்தில் சென்றுவிடும். அதனுல் எமக்கு சூரியஒளி மிக குறைந்துவிடும். பூமியின் மேற்பரப்பு பனிப் பாறையாக இருக்கும். பௌர்ணமியன்று நமக்கு கிடைக்கும் சந்திர ஒளியைப் போல் தான் சூரியனின் ஒளி இருக்கும். மனிதன் என்ற இனம் வேறு கிரகங்களில் குடியேறினுல் தான் இனி உண்டு. சூரியனை பூமி என்றும் வலம் வந்தபடி இருக்கும்.

எனக்குத் தெரியாது. காலையில் கோப்பி கொண்டு சென்றேன்.

''எனக்கு வேண்டாம் சாந்தா. உன்னிடம் நான் கோப்பிவாங்கி குடிக்கக்கூடாது. என்னை குடிகாரன் என நீ மதித்த பின்பும்.....''

''நீங்கள் ஏன் குடித்தீர்கள்? என்று கேட்டேனு?''

''நீ கேட்கவில்லைத்தான்; இந்த மூன்று இரவையும் நீ எப்படிக் கழித்தாயோ! என்பதை நினைக்கும் போதுதான்''

''இன்று கூட இரவுண்டு, எத்தனையோ இரவுகள் வரும் ஆனுல்....''

''உன்னைக் காண நான் வெட்கப்படுகிறேன் சாந்தா! நான் இப்போதே இங்கிருந்து போய் விடுகிறேன்'' என்று கூறி விட்டு சென்முர். அவர் இந்த வார்த்தையைக் கூருதிருந்தாலும் நானும் இந்த வார்த்தைகளையே கூறியிருப்பேன். எனது அண்ணர் இதை அறிந்து அவர் வீட்டுக்குச் சென்றபோது ''எனது மகனின் வாழ்க்கையை உன் தங்கை கெடுத்தாள்'' என்று தாய் திட்டினுவாம். அவர் கத்தியெடுத்து வெட்டப்போனுராம். அண்ணு வந்துவிட்டார்'' என்று சாந்தா கூறி முடிப்பதற்குள் எனது மகன் கருணுகரன் அங்கு வந்து ''ஐயா! அம்மா சாப்பிட வரட்டுமாம்'' என்று கூறினுன்.

''சாந்தா''

''என்ன டாக்டர்?''

''எல்லோரும் வாழத்தான் ஆசைப்படுகிறேம். வாழ்வது எப்படி என்பதை சிந்தித்து ஒரு முடிவுக்கு வருவதுதான் பிரச்சனைக்குரியது. நீ உன் வாழ்வைப் பற்றி ஏதாவது ஒரு முடிவுக்கு வந்திருந்தால் அதை நானும் அறியலாமா?''

''நீங்கள் கூறுவது உண்மை தான். ஆனுல் நான் வாழ ஆசைப்படவில்லை. நான்கு நாட்களுக்கு முன்பு நான் வாழ ஆசைப்பட்டது உண்மையே. என் வாழ்வு இனி வளப்படும் என்பதில் எனக்கு நம்பிக்கை கிடையாது.''

''கேதீஸ்வரனை நான் சந்தித்து இதுபற்றி ஒருமுறை பேசலாமென நினைக்கிறேன். அதன் பின்பு நீ இந்த முடிவுக்கு வரலாம்''

''மாறுபட்ட கருத்தால், பணத்தால், பழக்க வழக்கத்தால், பண்பால் ஏற்பட்ட பிரிவு அல்ல இது. பராய உணர்வுகள், பராயத் துடிப்புகளால் ஏற்பட்ட இந்த மன உடைவை நீங்கள் மீண்டும் ஒட்ட வைக்க எண்ணுவது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போலாகும். நீங்கள் எம் இருவருக்கும் இடையே ஓர் பிணைப்பை ஏற்படுத்த நினைப்பது நியாயம். டாக்டர்! அன்பு என்பது நிர்ப்பந்தத்தால் ஏற்படுவது அல்ல. அது தானுகவே உண்டாகும் இயல்புடையது. எமது உள்ளங்கள் இரண்டும் வடக்கும் தெற்குமாக ஆகிவிட்டது''

இவ்வாறு கூறிய சாந்தா அப்பால் நடந்தாள். கூந்தல் மல்லிகை அவிழ்ந்து என்முன் கீழே விழுந்தது.

வேதனையுடன் அதனைப் பார்த்தேன். காலையில் பறித்து அவள் கூந்தலில் கிடந்த அம்மலர்கள் நேரச் செலவினுல் பொலிவிழந்து கிடந்தன. அந்த மலர்கள் அப்படியே கருகிக் காய வேண்டியனவன்றி மீண்டும் பொலிவும் மணமும் பெற முடியாதவைகளாம்.

யாரால் அதற்குப் பொலிவூட்ட முடியும்?

# புரிந்து கொள்ளுங்கள் அறிவைப் பகிர்ந்து கொள்ளுங்கள்

1972–ம் ஆண்டு நடக்கப் போகும் ஒலிம்பிக் விளையாட்டில் 1908–ம் ஆண்டிற்கு பின் முதன் முதலாக அம்பு எய்தல் போட்டி வைக்கப் போகிறார்கள். இதற்கு ரஷ்யா இங்கிலாந்தில் விளையாட்டு உபகரணங்கள் உற்பத்தி செய்யும் ஒரு கம்பனியில் 500 வில்லுகளுக்கும் 1000 அம்புகளுக்கும் ஓடர் கொடுத்திருக்கிறது. அம்பு எய்தல் போட்டியில் ரஷ்யா ஒரு சமயம் முதல் ஸ்தானத்தைப் பெறக்கூடும்.

⁂

நுளம்புகளில் பெண் நுளம்புகள் தான் மனிதருக்கு கடித்துத் தொல்லை கொடுக்கின்றன என்று விஞ்ஞானிகள் தமது ஆராய்ச்சியில் கண்டு பிடித்துள்ளனர். ஆண் நுளம்புகளுக்கு எந்தவொரு பொருளையும் கடிக்கக் கூடியதாக வாய் உறுப்புக்கள் அமையவில்லை என்பதனாலே தான் அவைகளால் மனிதருக்கு துன்பம் இல்லை என திடமாக இந்த விஞ்ஞானிகள் கூறியுள்ளார்கள்.

⁂

மேல் நாடுகளில் வாரத்தில் இரண்டு நாட்கள் விடுமுறை விட்டு வருகிறார்கள். சனி ஞாயிறு ஆகிய இரண்டு நாட்களும் அவர்களுக்கு முழு விடுமுறையாகும். இதைப் பார்த்து ரஷ்யாவிலும் இரண்டு நாட்கள் விடுமுறை விட்டார்கள். சமீபத்தில் ஜப்பானிலும் இப்பழக்கம் பரவி விட்டது. எமது இலங்கையிலும் மக்கள் அரசாங்கம் விரைவில் இத்திட்டத்தைக் கொண்டு வரப் போவதாகக் கூறியுள்ளது.

⁂

பெரிய பெரிய கம்பனிகள் தங்களது லாபத்தில் பெரும் பகுதியை மறைத்துவிட்டு ஒரு சிறிய பகுதியைத்தான் கணக்கில் காட்டுகின்றன. இது உலகில் பல நாடுகளிலும் கையாளப்பட்டு வருகிறது. இதனால் ஒரு அரசாங்கத்திற்கு தன் நாட்டில் உள்ள சரியான கணக்கு விபரத்தைக் கணக்கிட முடிவதில்லை.

⁂

மர்மப் படங்களைப் பார்ப்பதற்கு வயது நிர்ணயம் என்று ஒன்று தேவையில்லை. எல்லா மர்மப் படங்களின் முடிவும் அதிகமாக குற்றவாளிகளைக் கண்டு பிடித்து அவர்களுக்குத் தண்டனை விதிப்பதுதான். இந்தப் படங்களைப் பார்ப்பதற்கு இப்போ ''அடல்ற்ஸ் ஒன்லி'' (வயது வந்தவர்களுக்கு மட்டும்) என்று கூறவேண்டியதில்லை. மர்மப் படங்களை எடுப்பதில் உலகில் சிறந்தவர் அல்பிரட் ஹிச்கொக். இவருடைய படங்களுக்கு தனி மதிப்பு உண்டு.

⁂

சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் செய்த இந்தியச் சோதிட மன்னன் திரு, கிருஷ்ணமூர்த்தி ஒரு டிசம்பர் மாதம் 20ந் திகதி மூன்ருவது உலக மகா யுத்தம் தோன்றும் எனக் கூறியுள்ளார். தான் தனது எழுபத்தி ஆருவது வயதில் காலமாவார் எனக் கூறும் இவர், உலகமகா யுத்தம்

# 6, 42, 18, 770

ஜப்பானில் நடைபெற்ற உலக கண்காட்சியான எக்ஸ்போ-70 கண் காட்சியில் கலந்து கொண்ட பார்வையாளர்களின் எண்ணிக்கைதான் ஆறுகோடியே நாற்பத்திரண்டு இலட்சத்து பதினெண்ணுயிரத்து எழு நூற்றி எழுபது ஆகும். இக் கண்காட்சி மைதானத்தில் ஐம்பத்தைந்து திருமணங்களும் பல திருமணங்களுக்கு வித்துக்களும் ஏற்பட வசதியா கியது. ஒரு குழந்தை கூட பிறந்துள்ளது என அக்குறிப்பு தொடர்ந்து கூறுகிறது.

தொடங்குவது எந்த வருடம் என்பதைக் கூற மறுத்து விட்டார். சிலவேளை தான் கூறுவது தப்பாகிவிடுமோ என்ற காரணத்திற்காகவும் இருக்கலாம் என்றே தெரியவில்லை.

✻✻

பிரபல ஹிந்தி மியூசிக் டைரக்டர் ஜெய்கிஷனுக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் இருக்கின்றன. இனிமேல் பிள்ளைகள் வேண்டாம் என்று இவர்கள் முடிவு செய்து விட்டார்கள். தமது கடைசிக் குழந்தைக்குப் பைரவி எனப் பெயர் இட்டுள்ளனர். வடநாட்டில் சங்கீதக் கச்சேரியை முடிக்கும் போது பாடகர்கள் பைரவி ராகத்தைப் பாடுவது வழக்கம். இதைக் கொண்டுதான் தமது கடைசிக் குழந்தைக்கு பைரவி என்று பெயரிட்டாரோ தெரியாது?

✻✻

அழகாக இருப்பதற்கு யாருக்குத்தான் ஆசை இருக்காது! கறுப்பு நிறம் உள்ளவர்கள் தினமும் குளிப்பதற்கு முன்னுல் பசும்பாலை உடலில் தடவிக் கொள்ள வேண்டும் இது கொஞ்சம் காய்ந்தவுடன் பச்சைப் பயறு மாவினுல் உடம்பை நன்கு தேய்த்துக் குளித்து வந்தால் நிறத்தில் சிறிது மாற்றம் காணலாம்!

✻✻

நல்ல பழக்கங்களை குழந்தைகளுக்குத் தாய் கற்றுக் கொடுக்க வேண்டும். கல்வியறிவையும் பொது அறிவையும் தகப்பன் கற்றுக் கொடுக்க வேண்டும். பெற்றேர் இதைச் செய்யாமல் இருந்தால் எதிர்காலத்தில் குழந்தைகள் கெட்டுவிடும். அவர்களைச் சேர்ந்தவர்களும் கெட்டுவிடுவார்கள்.

✻✻

குடும்பக் கட்டுப் பாட்டிற்காக எமது அரசாங்கம் இப்போது கூடிய சிரத்தை எடுத்து வருகிறது. இதற்கு மக்களாகிய நாமும் நல்லாதரவு நல்க வேண்டும். குடும்பக் கட்டுப்பாடு இல்லாவிட்டால், நாமும் இந்தியாவில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி போல் பஞ்சத்தால் கஷ்டப்பட வேண்டும்! எவரும் அளவுடன் பெற்று நிறைவுடன் வாழ வேண்டும்.

✻✻

பெண்களின் முகம் எப்பொழுதும் மென்மையாக இருக்க வேண்டும்! இதற்குப் பெண்கள் வாரத்திற்கு இரண்டு மூன்று முறை பச்சைப் பசுப்பாலை எடுத்து தங்கள் முகத்தில் தேய்த்துக் கொள்ள வேண்டும். நன்கு காய்ந்தபின் சோப்புப் போட்டுக் கழுவ வேண்டும். இப்படிச் செய்து வந்தால் முகம் பட்டுப் போல் மிருதுவாக இருக்கும்.

✻✻

முட்டாள்களையும் பொய்யர்களையும் நீங்கள் தெய்வங்கள் என்று கூறுவதைவிடக் கடவுளின் சிம்மாசனத்தைக் காலியாக

வைத்திருப்பது எவ்வளவோ மேல்.

❊❊

அமெரிக்காவில் வாஷிங்டன் நகரில் உள்ள இரு கல்லூரி மாணவர்கள் முத்தமிடுவதில் ஓர் உலக சாதனையை ஏற்படுத்தியுள்ளனர். பேர்வர்லி கோல் மார்க் என்னும் மாணவனும் ஹேறேஸ் பிரான்சிஸ் என்னும் மாணவியும் தொடர்ச்சியாக பன்னிரண்டு மணித்தியாலங்கள் முத்தமிட்டு இந்த உலக சாதனையை ஏற்படுத்தியுள்ளார்கள். பத்தொன்பது வயதுள்ள மாணவன் பேர்வர்லி முதல் பத்து நிமிடங்களும் சிறிது சிரமமாகவே இருந்தது, பின்னர் எமக்கு உணர்ச்சியும் அதிக தாகமும் பசியும் ஏற்பட்டது எனக் கூறினர்.

❊❊

இத்தாலியில் உள்ள ரியூறின் நகரில் இருக்கும் மிகப் பெரிய சப்பாத்துத் தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் ஓர் தமாஷான சங்கத்தை ஸ்தாபித்துள்ளனர். இச்சங்கத்தின் தலைவர், இத் தொழிற்சாலை அதிபரின் ஒரே மகளாவர். வாரத்திற்கு ஒருமுறை இச் சங்கம் இங்கு வேலை செய்யும் தொழிலாளர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவனை தங்கள் சங்கத் தலைவியுடன் அன்றையப் பொழுதைக் கழிக்க ஏற்பாடு செய்துள்ளது. இப்படிச் செய்வதினுல் இங்குள்ள தொழிலாளர் தமக்குக் குறிக்கப்பட்ட நேரத்திற்கு மேலும் வேலை செய்து வருகிறுர்கள்.

❊❊

ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னுவில் எடாகிருமா என்னும் அழகி (ஊமை) ஓர் கிளாஸ் பக்டரியில் ரைப்பிஸ்ற்ராக கடமையாற்றி வந்தாள். ஒருநாள் இவள் தனது காரியாலயத்தில் இருந்து வீடு திரும்பும் சமயம் மிகவேகமாக வந்த ஒரு லொறி, ஸ்ரியறிங் கழன்று அவளுடன் சென்ற தகப்பனுரை மோதிவிட்டது. இதைக் கண்ணுலே கண்டு பயத்தினுல் எடாகிருமா கத்திவிட்டாள். அன்று தொடக்கம் அவள் பேசத் தொடங்கி விட்டாள்.

❊❊

ஜப்பானின் தலைநகரான டோக்கியோ நகரம்தான் உலகிலே மிகப் பெரிய நகரம். இந்த நகரத்தில் ஒரு கோடி மக்களுக்கு மேல் வசிக்கிறுர்கள். இங்குள்ள றெயில் வண்டிகள் குறித்த நேரத்திற்கு தவருமல் வந்துவிடும். இதனுல் இங்குள்ள றெயில் வண்டிகள்தான் மக்களை காரியாலயங்களுக்கு ஏற்றிச் செல்கிறது.

❊❊

அமெரிக்காவில் ஒரு கார் கெட்டுப் போனுல் அதை உடனே நசுக்கி,இரும்பு விலைக்கு விற்றுவிட்டுப் புதுக்கார் வாங்கி விடுகிறுர்கள். அமெரிக்காவில் கார்கள் அவ்வளவு மலிவு. பழைய கார்களைத் திருத்தி ஓடுகிற பழக்கம் அமெரிக்காவில் கிடையாது.

❊❊

மேல் நாடுகளில் பெண்களுக்குப் பதினுலு வயது வந்துவிட்டால் அவர்களுக்குப் பல போய் பிரண்டுகள். (ஆண் சிநேகிதர்) இருப்பார்கள். இதனுல் அந்தப் பெண்கள் கண்ட கண்ட ஆண் பிள்ளைகளுடன் தம் இஷ்டப்படி வெளியில் கூடித் திரிவதற்கு பெண்களின் பெற்றேரும் அனுமதிக்கின்றனர். இப் பழக்கத்தினுல் ஏகப்பட்ட பெண்கள் கெட்டுப் போகிறுர்கள்.

❊❊

பிரபல ஹிந்தி தமிழ் நடிகை வைஜயந்திமாலாவை மணந்துள்ள டாக்டர் பாலி ஓர் பஞ்

சாப்காரர். திருமணம் செய்த போது இவரின் வயது நாற்பத்தி நாலு. வைஜயந்தியின் வயது முப்பத்தி ஒன்று. டாக்டர் பாலி ஏற்கனவே மணமாகி நான்கு பிள்ளைகளின் தந்தையாவர். இவர் தன் மனைவியை விவாக ரத்துச் செய்துவிட்டு வைஜயந் தியை மணந்தார்,

✻✻

இலங்கை இப்போது இந்தியாவை விட அதிகமான தேயிலையை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. இந்தியத் தேயிலையைவிட இலங்கைத் தேயிலை தரம்மிக்கதாகவும், விலை மலிவாகவும் விற்கப்படுவதே இதற்குக் காரணம். சமீபத்தில் ரஷ்யா இலங்கையின் தேயிலையை கூடுதலாக வாங்குவதற்கு சம்மதித்துள்ளது.

✻✻

கிழக்கு ஜெர்மனியில் மிக வேகமாக வீடுகளையும் பெரிய கட்டிடங்களையும் கட்டுகிறுர்கள். பத்து அடுக்கு முதல் 20 அடுக்குள்ள கட்டிடங்களைக் கட்டுவதற்கு ஜெர்மன் எஞ்ஜினியர்களுக்கு நாட்கணக்கில்தான் ஆகிறது. எமது இலங்கையில் இவற்றைக் கட்டி முடிக்க வருடக் கணக்கில் ஆகும்.

✻✻

ஜப்பானின் தலைநகரான டோக்கியோவில் நடைபெறும் எக்ஸ்போ-70 கண்காட்சியில் எழுபதுக்கு மேற்பட்ட நாடுகள் பங்குபற்றியுள்ளன. இவற்றில் உள்ள மெக்சிக்கோ அமைப்பின் நுளை வாயிலில் ஒரு தடவைக்கு ஆறு ஆண்களும் ஒரு பெண்ணும் இடைவிடாமல் இரவும் பகலும் இனிமையான கீத வாத்தியத்தை வாசித்துக்கொண்டிருப்பதைக் காணலாம்.

✻✻

எக்ஸ்போ—70 கண்காட்சியில் சுவிற்சிலாந்து கட்டிடத்திற்கு மேலே மட்டும் 30,000 மின் பல்புகள் போட்டுள்ளார்கள். இக் கண்காட்சியில் உள்ள ஒவவொரு ஸ்ரோறிலும் ஆயிரக் கணக்கான குடைகள் வைத்துள்ளார்கள். மழை வரும் போது காட்சிக்கு வந்திருப்போருக்கு பாவிப்பதற்கே!

✻✻

எக்ஸ்போ-70 கண்காட்சியில் உள்ள ரஷ்ய அரங்கில் 12 வயது மாணவர் குழு ஒன்றின் தயாரிப்பான யந்திர மனிதன் ஒன்றை அமைத்து இருந்தார்கள். கம்ப்யூட்டர் இயந்திர பாணியில் அமைக்கப்பட்டுள்ள இந்த யந்திர மனிதன் என்ன கேள்விகள் கேட்டாலும் பதில் கூறியது, ஆனுல் அரசியல் சம்பந்தப்பட்ட கேள்விகளைத் தவிர.

✻✻

விஞ்ஞானத்தில் நினைக்க முடியாத அளவுக்கு முன்னேறி இருக்கும் அமெரிக்கா, தனது

---

முதலாளி : நீ கண்டபடி கியர் மாற்றி கார் ஓடிறியாம். ஆயிரக் கணக்கில் கொடுத்து வாங்கின எனக்குத்தான் அதன் அருமை தெரியும். காரைக் கவனமாக ஓட்டவேணும்.

றைவர் : நான் கவனமாகத்தானுங்க செலுத்திறனுன் முதலாளி.

முதலாளி : சரி. கவனமாக காரை ஓட்டு, ஆனுல் என்னைக் கேளாமல் கியரை மாற்றப்படாது. தெரியுதோ?

றைவர் : ....??....?

நாட்டு நாணயங்களில் 'கடவுளை நம்பியிருக்கிறோம்' என்ற வாசகத்தைப் பொறித்து வருகிறார்கள். முதன் முதலில் 1864-ல் இரண்டு சென்ட் நாணயத்தில் தான் இந்த வாசகத்தைப் பொறித்தார்கள்.

✻✻

மஞ்சள் தேய்த்துக் குளிப்பது பெண்களுக்கு நல்லது. மஞ்சள் தேய்த்துக் குளிக்கும் பெண்களுக்குத் தோல் சிறிது சிவப்பாக மாறும். தோடம்பழத் தோலை காய வைத்துப் பொடி செய்து வைத்துக்கொண்டுஉடம்பில் தேய்த்துக் குளிக்கும் பெண்களுக்கும் தோல் சிறிது சிவப்பாக மாற்றம் அடையும்.

✻✻

பின்லாந்தின் தலைநகரான ஹெல்சிங்கியில் நிச்கோலாய் ஹெய்ம் என்பவனை மகோடா பேக் என்பவள் நாற்பத்தி இரண்டு வருடங்களாக காதலித்து வந்தாள். அவனும் அவளை நேசித்து வந்தான். அவன் தன்னை மணம் முடிக்கும்படி மகோடா பேக்கை தினமும் கேட்டு வந்தான். உனது மீசையை எடுத்தால்தான் நான் மணப்பேன் என்று அவள் அடம் பிடித்தாள். கடைசியில் தன் காதலிக்காக தனது மீசையை எடுத்துவிட்டான். திருமணம் முடிந்தது. அப்பொழுது அவனுடைய வயது எழுபத்தி ஆறு, அவளுடைய வயது எழுபத்தி ஐந்து,

✻✻

சமீபத்தில் அவுஸ்திரேலியாவின் பிறிஸ்பேனில் நடந்த இங்கிலாந்திற்கும் ஆஸ்திரேலியாவுக்கும் ஆன கிரிக்கட் போட்டியைப் பார்க்கச் சென்ற மக்கள் சுமார் 50,000 ரின் பியரையும் (TIN BEER) 10,000 போத்தல் பியரையும் குடித்துள்ளார்கள். இவ்வளவு தொகை பியரையும் ஐந்தே நாட்களில் முடித்துள்ளனர், விளையாட்டுப் பார்க்க வந்த பெருங்குடி மக்கள்.

**ஒரு சிகரட் = 15 நிமிடம்**

● புரியவில்லையா? புரட்டுங்கள் 25ம்பக்கம்

✻✻

அமெரிக்க கைக்கடிகாரக் கம்பனி ஒன்று புதிதாக ஓர் கைக்கடிகாரத்தைக் கண்டு பிடித்துள்ளது. இதற்கு நேரம் காட்டும் முட்கள் கிடையாது. இதன் முகப்பு சற்று இருண்ட நிறத்தைக் கொண்டுள்ளது. இதில் எழுத்துக்களும் கிடையாது. நேரத்தை அறிந்து கொள்வதற்கு இக் கடிகாரத்தில் இருக்கும் ஒரு சிறிய பட்டனை அழுத்தினால் போதும்.றேடியம் போன்ற எழுத்து மூலம் எமக்கு நேரத்தைக் காட்டும். உதாரணம், நாம் பட்டனை அழுத்தும் போது நேரம் ஒன்



ஒரு பைத்தியம் :

நான் இந்த உலகத்தையே வாங்கப் போகிறேன்.

மறு பைத்தியம் :

எனக்கு அதை விற்பதாக எண்ணம் இல்லையே !

றரை என்றால் கடிகாரம் 1-30 என எமக்கு அறிவிக்கும்.

**

தென் ஆபிரிக்காவில் யொகனிஸ்பேக் என்னும் இடத்தில் வசிக்கும் யாப் புத்தலா என்னும் ஓர் விவசாயி தனது நூறுவது பிறந்தநாளை தனது 100 பேரப் பிள்ளைகளுடன் சந்தோஷமாக கொண்டாடினர். அன்று இவர் தமது கிராமத்திலுள்ள 100 விவசாயிகளுக்கு 100 பசு மாடுகளைப் பரிசாக அளித்துள்ளார்.

**

தற்சமயம் ஆஸ்திரேலியாவில் சுற்றுப் பிரயாணம் செய்யும் இங்கிலாந்து கிரிக்கட் கோஷ்டி ஆறு டெஸ்ட் மாச்சுகளை விளையாடியுள்ளது. இந்த ஆறு டெஸ்ட் விளையாட்டிற்கும் இங்கிலாந்துக் கோஷ்டிக்கு (82000 பவுண்) சுமார் 1230000 ரூபா அவுஸ்த்திரேலியாவினல் கொடுக்கப்படவிருக்கின்றன. அடே யப்பா இவ்வளவு தொகையா என்று ஏங்காதீர்கள். இலங்கையும் தரம் மிகு கோஷ்டியாக மாறினல் இவ்வளவு பணம் பெறலாம்.

**

துருக்கியின் தலைநகரான ஸ்தான்பூல் நகரில் உள்ள தாச்சா கலீபரா என்னும் பெண் தமது கணவனுடன் ஓர் அதிசயமான, ஆனல் ஆபத்தான பந்தமம் பிடித்தாள். இந்த வருடம் ஆண்பிள்ளை பெற்றுத் தருவதாகவும் தவறினல் விவாகரத்துச் செய்து கொள்வதாகவும் என்று ....... அவள் கூறியபடி ஆண் குழந்தையைப் பெற்றாள். இக் குழந்தை அவளுக்கு பதினைந்தாவது குழந்தையாகும். ஏனைய பதின்நான்கு குழந்தைகளும் பெண்களாகும்.

**

கிழக்கு ஜெர்மனி இப்போது புதுப்புது மருந்துகளைக் கண்டு பிடித்து மிகவும் முன்னேறி வருகிறது. இம் மருந்துகளை மற்றைய நாடுகளிலும் பார்க்க மிகக் குறைந்த விலைக்கே விற்கிறது. ஜெர்மன் மருத்துவ நிபுணர்களுடன் தற்போது எம் நாட்டில் பரவிவரும் ஏகப்பட்ட நோய்களை ஒழித்துக்கட்ட புது வகை மருந்துகளை எம் நாட்டில் தயார் செய்வதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருவதாக அறியப்படுகிறது.

**

பிரபல மேற்கிந்திய கிரிக்கட் வீரர் சேர் பிருங் வோறல் இறந்த போது அவருக்கு வயது நாற்பத்திரண்டு மட்டுமே. இவர் மொத்தம் 51 டெஸ்ட் மாச்சுகளில் விளையாடியுள்ளார். இந்த மாச்சுகளில் இவர் எடுத்த மொத்த ஓட்டங்களின் எண்ணிக்கை 3816. இவர் வீழ்த்திய விக்கட்டுகளின் எண்ணிக்கை 69 இவர் பிடித்த காச்சுகள் 43.

**

யோஸ் இபாரு என்பவர் 1864-ம் ஆண்டு மெக்ஸிக்கோ

தேசத்தில் ரெபிபன் என்னும் கிராமத்தில் பிறந்தார். இவர் ஓர் விவசாயி. இவருக்கு நான்கு மனைவிகள் மட்டுமே. ஆனுல் இவருடைய பிள்ளைகளின் தொகை 66 ஆகும். 106 வயதான இவர் தனக்கு மேலும் பிள்ளைகள் பிறக்கும் என்று கூறுகிருர். இத்தனைக்கும் இவர் ஓர் சைவ உணவுப் பிரியர்.

⁂

பி. ஓ. ஏ. சி. விமானக் கம்பனி, விமானப் பிரயாணிகளுக்காகவும் உல்லாசப் பிரயாணிகளுக்காகவும், எக்ஸ்புளோறர்-2 (Explorer-2) என்னும் ஓர் புத்தகத்தை வெளியிட்டுள்ளது. 192 பக்கங்களைக் கொண்ட இப் புத்தகத்தில் இலங்கையின் உல்லாசப் பிரயாணத்தைப் பற்றி ஏழு பக்கங்களில் வர்ணித்துள்ளது! இதில் போயா விடுமுறை தினங்களையும் பிரசுரித்துள்ளது. இலங்கைக்கு இவ்வளவு பக்கங்கள் ஒதுக்கியது பற்றி நாம் பெருமைப்படுகிருேம்.

⁂

உலகில் இன்று ஒவ்வொரு மனிதனும் சராசரியாக எட்டுத் தீக்குச்சிகளைத் தினமும் பாவிக்கிருர்களாம். தினமும் அடுப்புப் பற்ற வைக்கவும், விளக்குகளை ஏற்றவும் பாவிக்கப்படும் தீக்குச்சிகளை விட; பீடி, சிகரட், சுருட்டு முதலியவைகளைப் பற்ற வைப்பதற்குத்தான் கூடுதலாக தீக்குச்சி செலவாகிறது.

⁂

கேரளத்தில் அரசாங்க இலாகாக்களும், அரசாங்க அதிகாரிகளும், பணக்காரர்களும் தான் ஒழுங்காக வருமானவரி கட்டுவதில்லை என்று திருவனந்தபுரம் மேயர் கூறியுள்ளார். ஏன் நம்நாட்டிலும் கடந்த யு.என்.பி அரசாங்கத்தில் அங்கம் வகித்த எம். பிக்களில் சிலர் லட்சக் கணக்கில் வருமானவரி செலுத்த வேண்டியிருக்கு என எமது முன்னைய பிரதமர் டட்லி சேன நாயக்கா கூறியுள்ளார் என அறிகிருேம்.

⁂

கருத்தடை மாத்திரைகளில் பலவகை மாத்திரைகள் இருக்கின்றன. ஒல்லியாக இருக்கும் பெண்கள் சாப்பிடுவதற்கு என சில மாத்திரைகளும் பருத்த பெண்கள் சாப்பிடுவதற்கு என்று சில மாத்திரைகளும் இருக்கின்றன. இவற்றை மாற்றிச் சாப்பிட்டுவிட்டால் ஒல்லியாக இருக்கும் பெண்கள் குண்டாகி விடுவார்கள். குண்டாக இருக்கும் பெண்கள் குண்டோதரிகளாகிவிடுவர்.

卐

## தக்காளிப் பழத்திற்கு ஒன்பது நீதிபதிகளின் தீர்ப்பு.

அமெரிக்காவில் உள்ளோர்கள் தக்காளிப் பழத்தைக் கேள்விப்பட்டதில்லை. 1850ம் ஆண்டு அமெரிக்காவில் தக்காளிப்பழம் புழக்கத்திற்கு வந்தது. தக்காளி காய்கறி வகையா, பழவகையா? பிரச்சனையும் எழுந்தது. முடிவுகாண பெரும் அறிஞர்களும் ஆராய்ச்சி நடத்திஞர்கள். முடிவுகாண முடியாத இந்தப் பிரச்சனை அமெரிக்க சுப்பிரிம் கோட்டுக்குப் போன போது, உயர் நீதிபதிகள் ஒன்பது பேர் முன்னிலையில் விசாரனையும், விளக்கமும் நடந்தன. இறுதியில் தக்காளி சட்டப்படி ஒரு காய்கறி வகையாகும் என தீர்ப்பு அளிக்கப்பட்டது.

# டாக்டரால் இருவரும் சிலையானார்கள்

செல்வி : சூரியகுமாரி

துள்ளித் திரியும் பிள்ளைப் பருவம் அது, கள்ளம் கபடமற்ற பிஞ்சு மனம் அவர்களுடையது. கஷ்டம் என்பது என்னவென்றே தெரியாத வெள்ளை உள்ளம் அவர்களுடையது. அதோ! அவர்கள் போகிறார்கள்! ஆம் சங்கரும் மாலதியும் கை கோர்த்துக் கொண்டு பாடசாலை செல்கிறார்கள். பால்ய நட்பினால் கட்டுண்ட இருவருடைய இல்லங்களும் அருகருகே இருந்தன.

மாலதி, தர்மலிங்கம் தம்பதிகளின் அருமை மகள். இரு அண்ணன்மார்களுக்குப் பின், ஆண்டுகள் பல கழித்துப் பிறந்த அன்புத் தங்கை.

சங்கர் குமஸ்த்தா ரகுராமனின் ஒரே புதல்வன். இரு அக்காமாருக்கு உள்ள ஒரே அன்புத் தம்பி. பாடசாலையிலும் சரி, விளையாடும் வேளையிலும் சரி, ஏன்? சாப்பிடும் பொழுது கூட இருவரையும் ஒன்றாகவே காணலாம். இப்படியே இவர்களின் நட்பு வளர்ந்து வரும் வேளையில் சங்கரின் தந்தை ரகுராமனுக்கு கொழும்புக்கு வேலை மாற்றம் வந்தது. அன்பு, பாசம், நட்பு என்பவை எல்லாம் கடமைக்கு முன் எங்கே? தந்தையின் வேலை மாற்றத்தால், சங்கர் மாலதியின் நட்புக்கு தடையேற்பட்டது. ஆம், சங்கரின் குடும்பமே கொழும்பு சென்றுவிட்டது. சங்கரைப் பிரிந்தது மாலதிக்கு இந்த உலகமே ஒரு முடிவிற்கு வந்தது போல் இருந்தது. சங்கருக்கும் துன்பந்தான். ஆனால், தலைநகரின் பனை ஓங்கும் கட்டிடங்களும், மக்களின் மனதில் மகிழ்ச்சியை ஊட்டும் மவுன்றலவனியா பீச்சும் மற்றும் கண்ணுக்கினிய காட்சிகளும் அவன் மனதிற்கு சிறிது உற்சாகத்தையளித்தது. நாளடைவில் இருவரின் நட்பும் தேய்பிறை போல் சென்றுவிட்டன என்ற அளவுக்கு இருந்தது.

வருடங்கள் ஐந்து கழிந்துவிட்டன. ஒரு நான் ஆதவன் இளைப்பாறும் நேரம் அது. வாசலில் மணிச் சத்தங் கேட்டு வாசலுக்கு வந்தாள் மாலதி. தந்தி ஒன்றைக் கையளித்துவிட்டு தபால்காரன் சென்றான்.

மாலதி தந்தியைப் பிரித்துப் பார்த்தாள். அவள் தன்னை அறியாமலே கதறிவிட்டாள். தனது பெயருக்கு வந்த தந்தியைப் படித்துவிட்டு செய்வதறியாது ஈஸிசெயரில் சாய்ந்துவிட்டார் மாலதியின் தந்தை. சங்கரின் தந்தை மாரடைப்பினால் இறந்துவிட்டார் என்பதே தந்தியில் கூறப்பட்டிருந்தது. மாலநியின் தந்தையும் தாயும் ரகுராமனின் ஈமக்கிரிகையில் பங்கு கொள்வதற்கு சென்றனர். மாலதிக்கும் அங்கு போக ஆவல்தான், ஆனால் இப்போ அவள் என்ன சிறுபிள்ளையா?

ஒன்றிற்கு இரண்டு டாக்ஸி வாசலில் வந்து நின்றதைக் கண்ட மாலதி முன் வராந்தாவுக்கு வந்தாள். தனது தாய் தந்தையருடன் சங்கரின் குடும்பமே அவள் வீட்டிற்கு வருகை தந்தார்கள். தனது வயது வந்த பெண்களை, வேலையற்று இருக்கும் சங்கரை நம்பி கொழும்பில்

## நாடகம் பிடிக்காவிட்டால் வெளியேறுங்கள் பிடித்தால் டிக்கட் வாங்குங்கள்.

மேற் காணப்படும் வசனங்கள் நாடகம் நடக்கும் இடங்களில் காணப் படும். டிக்கட் வாங்காமலே, நாடகம் நடக்கும் தியேட்டருக்குள் சென்று நாடகம் பார்க்கலாம். இடைவேளையின் போதுதான் டிக்கட் பிரச்சனை வரும். தொடர்ந்து நாடகம் பார்க்க விரும்புவோர் மாத்திரமே டிக்கட் வாங்க வேண்டும். நாடகம் பிடிக்காமல் வெளியேறி விட்டால் டிக்கட் வாங்காமலே வெளியேறலாம். இது ஹொல்லந்தில் தான் நடக்கிறது. நம்நாட்டில் இல்லை.

எப்படி இருப்பது? ஊருடன் சென்று ஏதாவது முயற்சிக்கலாம் என்ற எண்ணத்தில் எல்லோரும் யாழ்ப்பாணம் வந்துவிட்டார்கள்.

பால்ய பருவத்தில் நட்புக்கு இலக்கணம் கூறுவது போல் என்னுடன் பழகிய மாலதியா இவள் என, மாலதியின் மதிவதனத்தையும் சிற்பி செதுக்கிய பொற்கிளி போன்ற உருவத்தையும் ஓர் குடும்பப் பெண்ணுக்கேற்ற அடக்க ஒடுக்கத்தையும் கண்டு தனக்குள் ஒருவித நாணம் கொண்டான் சங்கர். காலத்தால் பிரிக்கப்பட்ட நாம் கோலத்தால் எவ்வளவோ மாறுபட்டுள்ளோமே! என்பதை இருவரது இதயமும் எண்ணத் தவறவில்லை. வைத்த கண் வாங்காமல் மாலதியையே பார்த்துக் கொண்டிருந்த சங்கர், தனது அன்பு மனைவியாக மாலதி வரமாட்டாளா? என எண்ணிப் பெருமூச்சு விட்டான்.

மாதங்கள் சில மறைந்து விட்டன. மாலதியின் தந்தையின் சிபார்சின் பேரில் சங்கருக்கு அரசாங்க அலுவலகம் ஒன்றில், லிகிதர் வேலை கிடைத்தது. மாலதியின் தந்தை, சங்கரின் குடும்பம் வசிப்பதற்கு தங்களின் வீட்டிற்குச் சமீபத்தில் ஒரு வீடும் பார்த்துக் கொடுத்தார். என்றும் வளர்பிறை போல் இரு குடும்பங்களின் நட்பும் வளர்ந்து கொண்டே போயிற்று.

காலம் செல்லச் செல்ல, சங்கரின் இதயத்தில் ஒலித்துக் கொண்டிருந்த காதல் என்னும் இன்ப ஊற்று மாலதியைக் காணும் நேரம் எல்லாம் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டே இருந்தது, அவளுக்கும் சங்கர் மீது அன்பு இல்லாமல் இல்லை. சிறு வயது தொடக்கம் ஒன்றாய்ப் பழகிய நட்பல்லவா? சங்கரின் குடும்பப் பொறுப்பை எண்ணி அவனுக்காகப் பட்சாத்தாபப் படுவாள் மாலதி.

ஒரு சமயம், தான் தனது விருப்பப்படி மணாளனைத் தேர்ந்தெடுக்கக் கூடாது, பாசமும் பரிவும் காட்டிய பெற்றோரின் சொற்படியே நடந்து கொள்ள வேண்டும் என்று மனதில் வைராக்கியம் கொண்டிருந்த மாலதியின் மனக்கோட்டை சங்கரைக் கண்ட பின்னர் தகர்ந்து பொடிப் பொடியாகி விடுமோ என்ற எண்ணம் அவள் மனதில் எழுந்தது. மாலதி, சங்கரையே நம்பியிருக்கும் குடும்பத்திற்கு தன்னால் ஏதாவது சிறிது கஷ்டமும் வரக்கூடாதென அவள் நினைப்பு. தான் சங்கரை மணந்தால் அவர்களது குடும்பம் கஷ்டமான நிலைக்குள்ளாகிவிடும் என எண்ணியிருந்தாள். அவள் உண்மையான உள்ளன்பு அவனிடம் இருந்தாலும் வெளிக்கு வெறுப் புணர்ச்சி போல காட்டிக் கொண்டாள், தன் வாழ்வு எப்படிப் போனாலும் பரவாயில்லை.

சங்கர் நலமே வாழவேண்டும் என்பதே அவளது உள்ளத்தில் எழும் ஆசை.

நாட்கள் எமக்காக நிற்குமா? நகர்ந்தது. மாலதியைப் பெண் பார்க்க பலர் வந்தனர். பெண் பார்க்கவரும் எல்லோருக்கும் மாலதி மாலையிடுவாளா? கடைசியில் அவள் தந்தையின் விருப்பத்துடன் தன் விருப்பத்தையும் தெரிவித்து டாக்டர் பாஸ்கரை மணந்து கொண்டாள்.

திருமணம், கொட்டு மேளம் கொட்டி, கோடி வாழ்த்துக்களும் ஆயிரக் கணக்கான ஆசிகளும் பெற்று இனிதே நடந்தேறியது. திருமணத்தைச் சிறப்பாக நடத்தியதில் பெரும்பகுதி சங்கரையும் அவனது குடும்பத்தையுமே சார்ந்தது. திருமணம் முடிந்து சில நாட்களின் பின் மாலதி கணவனுடன் புக்ககம் சென்றுவிட்டாள். கன்னியர் எல்லோரையும் காலம் கழித்து வைக்குமா? எல்லாக் கன்னியருக்கும் என்றோ ஒருநாள் விடிவு ஏற்பட்டுத்தானே தீரும். அது போல் காலமும் சங்கரின் சகோதரிகள் இருவரையும் பூவும் பொட்டும்இட்டு மாங்கல்யதாரமாக்கிவிட்டது.

திங்கள் பல தீர்ந்துவிட்டது. திகதிகள் பல கிழிந்துவிட்டன. மாலதியின் கணவனுக்கு யாழ். அரசினர் ஆஸ்பத்திரிக்கு மாற்றம் வந்தது. அப்போ பாஸ்கர் சத்திர சிகிச்சையில் பெயர் பெற்ற டாக்டராக புகழ் பெற்றிருந்தார். அவள் டாக்டருக்கு வாழ்க்கைப்பட்டு பல சுகபோகங்களை அனுபவித்துக்கொண்டிருந்தாலும் சங்கரின் நினைவும் அவன் குடும்பத்தின் நிலையும் அவள் அகக்கண் முன் அடிக்கடி தோன்றி மறைந்தன.

சிலசமயம் அவள் தன் வெள்ளை மனதைத் திறந்து தனக்கும், சங்கருக்கும், அவர் குடும்பத்தினருக்கும் இருந்த உறவு முறையை தன் அன்புக் கணவனுக்கே கூறுவாள். கள்ளமில்லா பிள்ளைமனம் போன்ற மாலதியின் பிஞ்சு மனதின் பிரதிபலிப்பைக் கேட்டு வஞ்சனையற்ற கள்ளங் கபடம் இன்றி நடக்கும் இயல்பை அறிந்து தனக்குள்ளே பெருமைப்படுவான். அவர்கள் இருவரின் அன்பின் சின்னமாக ஓர் ஆண் குழந்தை பிறந்தது. இருவரும் குழந்தையின் மழலை இன்பத்தில் தம்மையே மறந்திருப்பர். அவர்களுக்கு வாழ்க்கை ஓர் இன்பபுரியாக இருந்தது.

அன்று குழந்தையின் பிறந்த தினம். குழந்தையைப் பலரும்

## நல்ல தீக்குச்சி.

ஒரு மூடன் தீக்குச்சியை உரசி சிகரட்டைப் பற்றவைக்க முயன்றான். ஒரு குச்சியை உரசினான். அது பற்றவில்லை. அதைக் கீழே போட்டுவிட்டு இன்னொன்றை உரசினான். அதுவும் பற்றவில்லை. அதையும் கீழே போட்டுவிட்டு மூன்றாவதாக ஒரு குச்சியை எடுத்து உரசினான். அது எரிந்தது. உடனே சிகரட்டைப் பற்றவைத்துக் கொண்டான். அந்தத் தீக்குச்சியை ஊதி அணைத்தான். கீழே போடாமல் தனது சட்டைப் பையில் போட்டான். இதைக் கண்ட ஒருவன் ''அதை ஏன் சட்டைப் பையில் போட்டாய்'' என்று கேட்டான். ''இது நல்ல தீக்குச்சியாக இருக்கு, இன்னொரு சமயம் இதை உபயோகித்துக் கொள்ளலாம்.'' என்றான் மூடன்.


வந்து வாழ்த்தி பரிசுகள் பல வழங்கிச் சென்றனர்

பிறந்த தினவிழாக் களைப்பி னால் மழலை துயில் கொண்டது. தொடர்ந்து பாஸ்கரும், மால தியும் தங்கள் கடமை முடிந்து படுக்கைக்குச்சென்றுவிட்டனர். இரவு 11 மணி டெலிபோன் மணி அலறல் சத்தம் கேட்டு மாலதி ஓடிச் சென்று ரிஸீவ ரைக் கையில் எடுத்தாள்.

அதற்கிடையில் பாஸ்கர் எழுந்து வந்து ரிஸீவரைத்தான் வாங்கிக் கொண்டான். காலை யில் சத்திர சிகிச்சை செய்த நோயாளி மிகவும் ஆபத்தான நிலையில்இருப்பதாகவும்,உடனே புறப்பட்டு வரும்படியும், மறு முனையில் இருந்து பதில் வந்தது. மிகவும் பதட்டமடைந்து விட்ட டாக்டர் பாஸ்கர்......அவசரம் அவசரமாக தனது காரை எடுத் துக் கொண்டு வேகமாக வைத் தியசாலை நோக்கிப் புறப்பட் டார்.

டாக்டர் புறப்படும் பொழுதே தூறிக் கொண்டி ருந்த மழை அவர் புறப்பட்ட தும் பலமாகப் பொழிந்தது. தனியேயிருந்த மாலதிக்கு என் றுமில்லாத, இனந் தெரியாத கவலையாகவிருந்தது.

டாக்டரின் கார் வளைவுப் பாதையில் திரும்பிச் சென்று கொண்டிருந்த போது திடீரென அவரது காரின் முன் விளக்குகள் அணைந்துவிட்டது. வேகமாக கார் சென்று கொண்டிருந்த தால் திடீரென நிறுத்த முடிய வில்லை. சஞ்சலமடைந்த டாக்ட ரின் கார் தானாகவே நின்றது? ஆம்! டாக்டர் பாஸ்கரின் கார் பெரிய மரம் ஒன்றுடன் மோதி உரு மாறி நின்றது. பாஸ்கர் பலத்த காயங்களுடன் தூக்கி யெறியப்பட்டார்.



டாக்டர் :

உடம்பில் ஏதாவது வலி அல் லது நோவு உண்டா?

நோயாளி :

எனக்கு உடம்பிற்கு ஒன்றும் இல்லை ! மூச்சு விடும் போது தான் கடுமையாக நோகுது.

டாக்டர் :

அப்படியா, இந்தா; இந்த மருந்துடன் மூச்சு விடுவதும் நின்றுவிடும் பின் வேதனை இருக்காது.

சுயநினைவு பெற்ற டாக்டர் கண்ணைத் திறந்து பார்த்தார். நோயாளியைக் காப்பாற்றச் சென்ற தான், காப்பாற்றப்பட வேண்டியவராக கட்டிலில் படுத்திருப்பதையும், தனது சக டாக்டர்கள் தனக்கு அருகில் இருப்பதையும் அவதானித்தார்

பாஸ்கர் கண்விழித்து விட் டார் என்பதைக் கேள்வியுற்று, குழந்தையுடன் வெளியே நின்ற மாலதி ஓடோடி வந்து கண்ணீ ரும் கம்பலையுமாக நின்றாள். அவளைத் தொடர்ந்து சங்கரும் அவனது குடும்பத்தினரும் பாஸ் கரை முற்றுகையிட்டனர்.

எல்லோரையும் கண்ட பாஸ் கர் புதுத்தெம்பு பெற்றுத் தன் அருமைக் குழந்தையை அருகே அழைத்து ஆசைதீர முத்தமிட் டார். சங்கரை சைகையால்

அருகேயழைத்து அவனிடம் குழந்தையை ஒப்படைத்துவிட்டு மாலதியையும் சங்கரையும் மாறி மாறிப் பார்த்தார். டாக்டரின் உள்ளத்திலிருந்து ஏதோ வார்த்தைகள் உருவெடுத்து உதடு வரைக்கும் வந்தன. வெளியே கூற முடியவில்லை. ஏதோ கூற பலமுறை முயற்சித்தார் முடியவில்லை.

எனது வாழ்வு முடியப் போகும் இந்நேரத்தில் வாழா வெட்டியாக இருக்கப்போகும் மாலதியை வாழ வைக்க வேண்டும் என்ற ஆசையும், அன்பும் இதயத்தின் அடித் தளத்தில் இருந்து நுணி நாக்குவரை வந்தது. ஆனுல் வெளிவரவில்லை. தன் குழந்தைக்கும் மாலதிக்கும் வாழ்வுப் பாதையில் கூடிச் செல்ல சங்கரைவிட யாரும் இருக்க முடியாது என்ற முடிவெடுத்த பாஸ்கர் செய்கையால் காட்டிவிட்டார்.

மாலதியின் கரத்தையும், சங்கரின் கரத்தையும் டாக்டர் இறுக இணைத்தார். மிகவும் திருப்திகரமான மனத்துடன் டாக்டரின் உயிர், உடலைவிட்டுச் சென்றது. இயற்கையின் சதியை உணர்ந்த டாக்டர்கள் அவ்விடத்தை விட்டகன்றனர். டாக்டரின் முடிவால் சங்கரும் மாலதியும் சிலையாக நின்றபடி டாக்டரின் உடலைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

# குத்துச்சண்டை வீரர் - கஷியஸ் கிளே

முன்னுள் உலக சம்பியன் கஷியஸ் கிளே தனது பெயரை முகமது அலி என்று மாற்றிக் கொண்டதும், சம்பியன் பட்டம் பறிக்கப்பட்டு சிறை சென்றதும் அறிந்த விஷயம்.

கஷியஸ்கிளே மீண்டும் உலக சம்பியன் பட்டம் பெறுவதற்காக பல வீரர்களுடன் மோதி வருகிருர். சமீபத்தில் அதி அபார குத்துச் சண்டை வீரர் ஒஸ்கார் பொனுவினு என்பவருடன் மோதினுர். ஏற்கனவே கிளே ஒஸ்காரை ஒன்பதாவது ரவுண்டில் விழுத்தி விடுவேன் என்று சவால் விட்டிருந்தார். ஆட்டம் ஆரம்பமாகி 9-வது ரவுண்டில் ஒஸ்கார் பலமான குத்து ஒன்றை கிளேயின் தலையில் போட்டார். அப்போ கிளே ''நான் கூறியது ஒஸ்காருக்குச் சாதகமாக அமைந்து விட்டதோ!'' என்று கூட சிந்தித்து விட்டாராம்.

பின் ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்டு 15 ரவுண்டுகள் வரை போராடி 15-வது ரவுண்டில் ஒஸ்காரை வீழ்த்தி, கிளே வெற்றி பெற்ருர். ஒஸ்கார் தற்போதய உலக சம்பியனுடன் 25 ரவுண்டுகள் வரை நிண்டுபிடித்தவர்.

உலக சம்பியன் (F)பிறிசியர் என்பவருடன் கிளே பெப்ரவரி நடுப்பகுதியில் மோதுவார். கிளே மீண்டும் உலக சம்பியன் பட்டத்தைப் பெறுவாரா? நிச்சயம் பெறுவார்! காரணம், அவருக்கு குத்துச் சண்டை கைவந்த கலை.

# யார் கொலைகாரன்?



2

கே. மாதவன்

அந்த அமைதியான நேரத்தில் அவன் போட்ட சத்தம் இரண்டு அடுக்கு மாளிகையின் சுவர்களிலும் மோதிப் பெரும் பயங்கரமாக எதிரொலித்தது. இப்படியான ஒரு சத்தத்தை சற்றும் எதிர்பார்க்காத அந்த பருவமங்கை தன் கைகளால் காதுகளை பொத்திக் கொண்டாள். அவனுக்கு சப்த நாடிகளும் அடங்கி ஒடுங்கி நின்றுவிட்டது போல் ஒரு உணர்வு. அதுமட்டுமா. அந்த மாளிகையே இடிந்து தனது தலையில் விழுந்துவிட்டது போல் ஒரு பிரமை. தன் சுய நினைவுக்கு வர சில நிமிடங்கள் பிடித்தன. ஆனால் இவன் ஏன் இப்படி அலறினான்? என அவளுக்கு விளங்கவில்லை.

அவன் தன் நினைவு பெற்றபின் தன்னை சுதாகரித்துக் கொண்டு சுவரில் மாட்டப்பட்டிருந்த படத்தை சுட்டிக் காட்டி ஏதோ கேட்க முயன்றபோது அவனது நாக்கு பேச மறுத்தது.

அவன் காட்டிய படத்தைப் பார்த்ததும் அவளுக்கு அவன் ஏன் கத்தினான் என விளங்கிவிட்டது. அந்தப் படத்தில் இருக்கும் உருவம் அவளின் தந்தை. அவர்தான் பொலிஸ் இன்ஸ்பெக்டர் இராமநாதன்.

நரிக்கும், கரடிக்கும் பயந்து புலி, சிங்கம் வாழும் குகைக்குள் புகுந்துவிட்ட உணர்வு. பொலிஸ்காரர்களை கண்டு தலை தெறிக்க ஓடிவந்து இன்ஸ்பெக்டர் வீட்டின் வலையில் சிக்கி விட்டேன் என மனம் வெதும்பி தப்பியோட முயற்சியை யோசிக்கலானான்.

அவனது துடிப்பையும் பயத்தையும் கண்ட அவள், மனதிற்குள் சிரித்துக் கொண்டே பேசலானாள். "அவர்தான் என் அப்பா, நான் அவரது ஒரே மகள்'' என்றாள்.

அவளுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டே மெதுவாக கதவைத் திறந்து தப்பியோட முயன்றான்.

"என்ன மிஸ்டர்! தப்பிவிடலாம் என்ற எண்ணமா? அதுதான்" என்று மௌனமானுள்.

சில விநாடிகளை அந்த மௌனம் விழுங்கியது. அவனது இதயமும் செவிகளும் அவள் தொடர்ந்து என்ன சொல்லப் போகிறுளோ எனப் பயத்துடன் கூர்மையாகியது.

"மிஸ்டர்! நீங்கள் தப்ப முயற்சிப்பது கோழைத்தனம்!" என அவனின் கரத்தைப் பிடித்தாள்.

"மன்னிக்க வேண்டும். நீங்க செய்த உதவியை என் உயிர் உள்ளவரை நான் மறக்க மாட்டேன். என்றும் கடமைப்பட்டவனுக இருப்பேன்." என ஒரே மூச்சில் சொல்லி விட்டு போக மீண்டும் எத்தனித்தான்.

"இன்ஸ்பெக்டர் மகள் காட்டிக் கொடுத்து விடுவாள் என்ற பயம் வேண்டாம். என்னுல் உங்களுக்கு எவ்வித ஆபத்தும் வராது. இது உறுதி, என்னை நம்புங்கள்." என உறுதிமொழி கொடுத்தாள்.

அவளின் உள்ளம் தன் தந்தையை எண்ணியது. இன்ஸ்பெக்டர் இராமநாதன் பெரும் புகழ் பெற்றவர். அது மட்டுமா, நீதியை நிலைநாட்ட தன் உயிரையும் கொடுக்க சித்தமானவர். லஞ்சம் என்பது அவரைப் பொறுத்த வரையில் கனவிலும் கிட்ட நெருங்க முடியாது. தனக்கென ஒரு வழியுண்டு என இருப்பவர். அவர் நிர்வாகத்தில் எந்தக் குற்றவாளியும் தப்பியது இல்லை. சட்டத்தை ஏமாற்றப் பார்க்கும் கபோதிகளை விடுவதும் இல்லை. அப்படியான பாராட்டுக்களையும், துணிச்சலையும் உடைய அவரிடம் இருந்து இவன் தப்பி விட்டான். அப்படியானுல், எனது தந்தையைவிட; என எண்ணுவதற்கு முன் அவளது சிந்தனையோட்டத்தை அவன் தடுத்து விட்டான்.

"இங்க பாருங்க இந்த வீட்டில் வேறு யாராவது இருக்கிறுங்களா" என்றுன்.

"பயப்பட வேண்டாம். எங்கப்பாவிற்கு நைட்டியூட்டி, விடியத்தான் வருவார்" என்றுள்.

"யாருமே இல்லாத இந்த வீட்டில் ஒரு ஆணும் வயது வந்த பெண்ணும் தனியாக பேசிக்கிட்டிருந்தா அது பெரும் தப்பம்மா?"

"நம்ம மனது சுத்தமாக இருந்தால் சரிதான். மற்ற வங்களைப் பற்றி நமக்கு ஏன் கவலே"

"நீங்க சொல்லுவதில் அர்த்தம் உண்டு. ஆனல் உலகம் அப்படிப் பார்க்காது. உடம்பெல்லாம் பல்லாக இருக்கும் இந்த உலகத்திற்கு நல்லது கெட்டது தெரியாமல், தெரிஞ்ச மாதிரி சொல்லித் திரியும். என்னைப் பற்றிக் கவலைப்படவில்லை. நீங்க எதிர்காலத்தில் நல்வாழ்வு வாழ வேண்டியவங்க!" என்றவண்ணம் வெளியே செல்ல ஆயத்தமானன்.

கொலை செய்ததாக குறிப்பிடும் இவன் இதயத்தையும் நல்லெண்ணத்தையும் எண்ணி மகிழ்ந்தாள்.

"இப்போது நீங்க வெளியே போனல் நிச்சயம் பொலிஸ் உங்களை பிடித்துவிடும். இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டு தப்பிய நீங்கள் மீண்டும் அவர்கள் கையில் சிக்கினல் உங்களால் மீண்டும் தப்பமுடியாது."

அவளின் வார்த்தைகள் அவனுக்கு ஆறுதல் அளித்தாலும் பயம் கூடுதலால் தயங்கிக் கொண்டே நின்றுன்.

"இவ்வளவு நல்லவராக தெரியும் நீங்கள் ஏன் கொலை செய்தீர்கள்?"

இப்படியான ஒரு கேள்வியை சற்றும் எதிர் பார்க்காத அவன், இக் கேள்விக்கு பதில் சொல்ல மனம் துடித்தது.

"விதி என்பார்கள் பக்தர்கள்! சூழ்நிலை சதி செய்து விட்டது என்பார்கள் மற்றவர்கள். இதில் எனது நிலை எது என்று எனக்கே தெரியவில்லை. ஆனல் மனிதனை மனிதன் நேர்முகமாகவோ, பழிக்குப் பழியாகவோ, நயவஞ்சகமாகவோ கொலை செய்வது பெரும் குற்றம் என்று நான் மற்றவர்களுக்கு போதனை செய்தேன். அந்தப் போதனை என் வாழ்க்கையில் இப்படி ஒரு நிகழ்ச்சியை உண்டுபண்ணி எனக்கு ஒரு பாடத்தைக் கற்பித்து விட்டது" என்று பெரும் பிரசங்கம் நடத்தி குலுங்கிக் குலுங்கி அழுதான்.

அவனைப் பார்க்க பெரும் பரிதாபமாக இருந்தது. அவளது இதயம் ஏன் இந்தக் கேள்வியை கேட்டேன் எனத் துடித்தது.

அருகில் இருந்த பிளாஸ்க்கை திறந்து ஒரு கிளாசில் பால் ஊற்றினள்.

"இதைச் சாப்பிடுங்கள், நீங்கள் என்னுடைய விருந்தாளி, பிளீஸ் குடியுங்கள்."

"நன்றியம்மா! எனக்கு வேண்டாம்"

அவள் வற்புறுத்திக் கொடுத்து, "உங்கள் பெயரைச் சொல்லவில்லையே"

"என் பெயர் கோபால், தாயும் தங்கையும் இருக்கிறார்கள்."

"என் பெயர் ஜானகி" அவளாகவே முந்திக் கொண்டாள்.

"எல்லோரும் எங்கே இருக்கிறார்கள்? நீங்கள் எங்கே வேலை செய்கிறீர்கள்"

"நான் யாழ்நகரில் இருக்கும் பெரிய ஏற்றுமதி - இறக்குமதி கம்பனியான ராஜேஸ்வரியில் பிரதம குமாஸ்த்தாவாக வேலை செய்கிறேன். கைநிறைய சம்பளம் வாங்குகின்றேன். கம்பனியின் முதலாளியும் என்னைத் தன் பிள்ளைபோல் பார்ப்பார். என்மேல் அவர் தனிப்பற்றும் வைத்திருந்தார். அவர் அடிக்கடி வேட்டைக்குப் போவது வழக்கம். அப்படி போவதாயின் இரண்டு நாட்களுக்கு முன் என்னிடம் கூறுவார். ஆனால் அக்கொலை நடந்தன்று காலை ஆபீசுக்குப் போனதும், என்னை முதலாளி கூப்பிடுவதாக பையன் சொன்னதும், நானும் முதலாளியின் அறைக்கு போனேன். "என்னப்பா கோபால்! காப்பி சாப்பிட்டியா?" என்று உற்சாகமாக வரவேற்கும் அவர், அன்று ஏதோபோல் இருந்தார். "கோபால் என் துப்பாக்கியை லோட்பண்ணு" என்று அவசரப்படுத்தினார். அவரிடம் காரணம் கேட்டேன். அவரது கோபத்தால் சிவந்த கண்களே, எனது கட்டளை, நீ செய்ய வேண்டியது என, எனக்கு பதில் சொல்லியது.

அவரது கட்டளையை நிறைவேற்ற, துப்பாக்கியை எடுத்து குண்டுகளை அதனுள் திணித்துவிட்டு குழாயை, மூடினேன். என் கைகள் பதட்டத்தால் நடுங்கித் தடுமாறின. மீண்டும் நான் துப்பாக்கியில் குண்டுகளை சரி பார்த்தபோது 'டாமார்' என்று துப்பாக்கி வெடிச் சத்தத்துடன் முதலாளியின் மார்பில் குண்டு பாய்ந்தது. எதிரே இருந்த முதலாளி பெரும் அலறல் சத்தத்துடன் சாய்ந்தார் என்னை அறியாமல் நான் சுட்டுவிட்டேன். அவர் துடிதுடித்து இறந்தார். மயக்க

மடைந்த நான் விழித்தபோது என்னைச்சுற்றி பொலிசாரும் டாக்டர் ஒருவரும் நின்றார்கள். நான் நடுங்கினேன். கொலைக் குற்றத்திற்கு தூக்குத் தண்டனை நிச்சயம் கிடைக்கும் எனப் பயந்தேன். அன்புத் தாயின் முகமும், தங்கையின் முகமும் என் முன் தோன்றி; நீ இல்லாவிட்டால் நாம் எப்படி வாழ்வது என்று கேட்பதுபோல் இருந்தது. தப்பியோட முயற்சி செய்தேன். உங்கள் அப்பா என்னைப் பிடித்துவிட்டார். நான் உண்மைகளை அன்னையின் மேல் ஆணையிட்டுக் கூறினேன். கேட்க மறுத்து விட்டார்கள். அழுவதா சிரிப்பதா என புரியாத நிலையில், கம்பனியில் இருந்து ஜீப்பில் ஏற்றினார்கள். ஜீப்பில் என்னைச்சுற்றி பொலிஸார் இருந்தனர். ஜீப் பெரிய வீதியில் ஓடி, ஆஸ்பத்திரி வீதியில் திரும்பியதும் நான் ஜீப்பில் இருந்து குதித்து மார்க்கட் ஊடாக ஓடி தப்பிவிட்டேன். இப்பொழுது சகல பொலிஸ் நிலையமும் என்னைத்தான் தேடுகின்றன.'' என்று கோபால் கூறினான்.

அவனது கையில் இரத்தம் வழிந்துகொண்டு இருப்பதை ஜானகி கண்டுவிட்டு தன் சேலைத் தலைப்பைக் கிழித்து கட்டுப் போட்டாள்.

அதே வினாடி......? கதவும் தட்டப்பட்டது. கோபால் கதவுத் துவாரம் வழியாக வெளியே யார் வந்திருப்பது என்று பார்த்ததும் அவன் இதயம் நின்றுவிட்டது போல் ஒரு உணர்வு ஏற்பட்டது.

(தொடரும்)

## புதிருக்கு விடை இதோ!

ஒருவன் ஒரு சிகரட் புகைப்பானாகில் அவனது ஆயுளில் 15 நிமிடத்தைக் குறைத்துக் கொள்கிறான். தினமும் 20 சிகரட்டுகள் புகைப்பவன் தனது ஆயுளில் 9 வருடத்தைக் குறைத்துக் கொள்கிறான் என்று பிரிட்டிஷ் டாக்டர் ஒருவர் கூறியுள்ளார்.

மேலும் அவர் பேசுகையில், இப்படிப் பல கெடுதிகளை எப்படி எடுத்துக் கூறியும் சிகரட் புகைப்பவர்கள் அப் பழக்கத்தை விட்டுவிடவோ, அன்றி குறைத்துக் கொள்ளவோ முயற்சிப்பதில்லை; என்றும் சிகரட் மீது ஏகப்பட்ட வரிகளை விதித்து, சிகரட் விளம்பரங்களை முற்றாகத் தடை செய்தால் மக்களிடையே புகைக்கும் பழக்கத்தைக் குறைத்துக் கொள்ள முடியும் என்றார் அவர்.

ஆதாரம்: 'ஹெல்த்'

# ஸ்ரீமான் 1970 1971 இருவரின் சந்திப்பு.

பி. எஸ். நாதன்

1970ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ந் திகதி இரவு மணி 11–45. ஸ்ரீமான் 1970 தனது கடைசி இராச் சாப்பாட்டை முடித்துவிட்டு தனது அறையில் இருப்புக் கொள்ளாமல் அங்கும் இங்கும் உலாவுகின்றார். இன்னமும் பதினைந்தே நிமிடங்கள்தான் இருக்கின்றன இவருடைய கடமை முடிய.

ஸ்ரீமான் 1969 அவர்களிடம் இருந்து எனது பொறுப்பை ஏற்கும் போது எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தேன். அப்பப்பா! எனது ஆட்சிக் காலத்தில் நடந்த அட்டூளியங்களை என்னால் எண்ணியே பார்க்க முடியவில்லையே!

கதவில் யாரோ தட்டும் சத்தம் கேட்கிறது. உள்ளே வரலாம் என்ற ஸ்ரீமான் 1970ன் குரலைத் தொடர்ந்து, ஸ்ரீமான் 1971 அறையினுள் காலடி எடுத்து வைத்தார்.

ஸ்ரீமான் 1970 : வந்துவிட்டாயா? அப்பப்பா! எனது பாரச் சுமையை ஏற்றுக்கொள். நான் சென்றுவிடுகிறேன். முதலில் டியூற்றி செக்ரோல் புத்தகத்தில் ஒப்பத்தைப்போடு.

,, 1971 : ஏன் இப்படிப் பதறுகிறாய்? அப்படி என்ன வரப் போகுது? எனது கடமையின் போது பார் நான் எவ்வளவு சந்தோஷமாய் மக்களைக் கவருகிறேன் என்று,

,, 1970 : ஆஹா! அப்படித்தான் நானும் ஸ்ரீமான் 1969 அவர்களிடம் இருந்து வேலை பாரம் எடுக்கும்போது கூறினேன், ஆனால் நடந்தது என்ன?

,, 1971 : இன்று உலகில் ஒரு நாடாகுதல் உன்னை வாழ்த்தவில்லையா?

,, 1970 : ஏன் இல்லை? இருக்கிறதே மக்கள் அரசாங்கத்தை அமைத்த இலங்கை. இலங்கை மக்களுள் முக்கியமாக கலாநிதி என். எம். பெரேரா என்றும் என்னை நினைவில் வைத்துக் கொள்வார். ஆனால் பணத்தைப் பதுக்கிய பணக்காரர்களும் கொழுத்தும் வெயிலில் நீண்ட கியூவில் நின்று பழைய 50/- 100/- ரூபா நோட்டுக்களை மாற்றிய மக்களும்தான் என்னை இன்னமும் திட்டிக் கொண்டிருக்கிறார்கள்.



சங்கர் : மச்சான் இன்றைக்கு எம். ஜி. ஆரின் புதுப்படம், வா போவோம்.

ரவி : சரியான கூட்டமாய் இருக்கும் அடுத்த வாரம் போவோமே!

சங்கர் : அடுத்த வாரமா? எம். ஜி. ஆரின் படம் என்ருல் முதல் நாளே பார்த்திட வேண்டும். இல்லாவிட்டால் சண்டைக் காட்சிகளில் உற்சாகம் இருக்காது. எப்படியோ முதல் நாள் என்ருல் களைப்புக் குறைவாக இருக்கும் எம். ஜி. ஆருக்கு.

---

ஸ்ரீமான் 1971 : ஆனுல் யாழ்ப்பாண மக்கள் உன்னை முற்ருக வெறுத்துள்ளார்களாமே!

,, 1970 : ஆமாம்! பாழாய்ப்போன பாலைதீவுப் படகு விபத்தால் யாழ்ப்பாண மக்களிடையே சிறிது கெட்ட பெயரை வாங்கிவிட்டேன்.

,, 1971 : ஐக்கியத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கிய ஐக்கிய அரபுக் குடியரசின் அதிபர் நாஸரை இழந்த அரபு மக்களும் உன்னைத் தூற்றிக் கொண்டிருக்கிருர்கள் என்பதை மறந்துவிடாதே!

,, 1970 : ஆமாம்! அரபு உலகமும் என்னை என்றும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளும் அளவுக்கு செய்து விட்டேன்.

,, 1971 : பிரான்சு நாட்டின் ஜனுதிபதி டிகோலையாகுதல் விட்டு வைத்தாயா?

,, 1970 : காலம் வந்தது; காலன் வந்தான். இது என் குற்றமா?

,, 1971 : அதுமட்டுமா செய்தாய்? பாகிஸ்தானில் இந்தப் பாரறிய பகிரங்கமாய் நடந்தது என்ன?

,, 1970 : ஐயோ! அதை மீண்டும் கூருதே. பல லட்சம் மக்களின் உயிரைப் பலிகொண்ட புயலையும் கடல் கொந்தளிப்பையும் உருவாக்கியதை என்னுல் என்றும் மறக்கவே முடியாது. இது இயற்கையின் கொந்தளிப்புத்தானே. ஆனுல் பாகிஸ்தானில் இராணுவ ஆட்சியை நீக்கி தேர்தலை நடாத்தியுள்ளேனே!

,, 1971 : ஆமாம்! உன்னுலும் இதை மறக்கமுடியாது. பாகிஸ்தான் சரித்திரத்திலே அபலைகளின் கண்ணீரால் பொறிக்கப்பட்டுள்ள இந்த சரிதையை என்றும் எவரும் மறக்க மாட்டார்கள்.

,, 1970 : இந்தியாவும் என்னை நினைத்துக் கொள்ளும் வண்ணம் நடந்துள்ளேன்.

ஸ்ரீமான் 1971 ; ஆமாம்! பாரத விஞ்ஞானி, சார் சி. வி. ராமனை யும் கொன்றுவிட்டாயே! உன்னை அவர்கள் மறப் பார்களா? இல்லை மறக்கவும் முடியுமா எனக் கேட் கிறேன். பின்னே! நீ யாருக்குத்தான் நன்மை செய் தாய்?

,, 1970 : ஏன்! வியட்நாம் போருக்கு ஓரளவாகுதல் முற்றுப் புள்ளி வைக்கவில்லையா? உலக குத்துச்சண்டை வீரர் காசியஸ் கிளேயை இரண்டு வருடச் சிறை யின் பின் விடுதலை செய்யவில்லையா? வணக்கத்திற் குரிய பாப்பாண்டவரை உலக மக்களுக்கு நேரடிக் காட்சி கொடுக்க வைக்கவில்லையா? தென்—ஆபிரிக் காவை கிரிக்கட்டில் உலக சம்பியன் ஆஸ்திரேலி யாவை ஜெயிக்க வைக்கவில்லையா? யாழ்ப்பாணத் திற்கு லக்ஷபான வெளிச்சத்தைக் கொடுக்கவில் லையா?

,, 1971 : பூ! இவ்வளவுதானு நீ செய்த நன்மைகள்!

,, 1970 : ஏன்? தி. மு. க வையும் சுதந்திரக் கட்சியையும் பிரித்து வைக்கவில்லையா? கொடுத்துக் கைசிவந்த குமணன், மக்கள் திலகம் எம். ஜி. ஆர். அவர்களை ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடந்த எக்ஸ்போ-70 காட்சிக்கு உலகம் சுற்றும் வாலிப ஞக அனுப்பி வைக்கவில்லையா?

,, 1971 : ம்! வேறு

,, 1970 : நடிகர் திலகம் சிவாஜிகணேசனின் 43-வது பிறந்த தினவிழாவை தமிழ் நாட்டின் தலை நகரில் ஆயி ரக் கணக்கான கார்கள் பவனிவந்து சிவாஜி ரசி கர்களை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தினேனே! பார் எல்லாம் பரந்து கிடக்கும் பண்டைத் தமிழின் பெருமையை விளக்க பாரீசில் தமிழாராய்ச்சி மகாநாட்டை நடாத்தி வைத்தேனே! இவை போதாதா?

,, 1971 : அமெரிக்க நடிகை ஷரன்டேட்டைக் கொலை செய்து விட்டாயே?

,, 1970 : குரங்கில் இருந்தே மனிதன் பிறந்தான் என்பதை இன்று உலகிற்குக் காட்டிக் கொண்டிருக்கும் 'ஹிப் பீஸ்' செய்த தவறினல் அமெரிக்க சினிமா விசிறி களிடமும் நான் கெட்ட பெயரைப் பெற்று விட் டேன். ஆனல் இதற்கு ஈடாக அமெரிக்காவின் அண்டை நாடான பிரேசிலுக்கு ஒலிம்பிக் விளை யாட்டில் உதைபந்தாட்டத்தில் உலக சம்பியன் பட்டத்தை எடுத்துக் கொடுத்திருக்கிறேனே!

,, 1971 : மன்னிக்க முடியாத குற்றம் ஒன்றை மகாராணிக்கு இழைத்துள்ளாயே! இதை மறுக்கிருயா?

*ஸ்ரீமான் 1970 :* *மகாராணியாருக்கு இழைத்தது மன்னிக்க முடியாத குற்றம் அல்ல! ஏழை மக்கள் எப்படி கஷ்டப்படுகிறார்கள் என்பதை உணர்த்துவதற்கே சமீபத்தில் இங்கிலாந்து முழுவதும் மின்சார வெளிச்சத்தை நிறுத்தினேன். மகாராணியாரை மெழுகு திரி வெளிச்சத்தில் உணவருந்த வைத்தது ஒரு குற்றமா?*

*,, 1971 :* *கடைசியாக ஈழத் தமிழர்களுக்கு விஷேச சலுகை என்ன செய்தாய்?*

*,, 1970 :* *ஈழத் தமிழர்களுக்குத்தானே மாதம் ஒருமுறை நவரசம் கொண்ட ''வானவில்'' மாத மலரை அளித்துள்ளேனே! இது ஒன்றே போதுமே!*

*,, 1971 :* *சபாஷ்! உனது வரவு செலவுக் கணக்கைப் பார்த்தால் வரவென்னும் நன்மைதான் அதிகம். எனக்கும் இப்படியே வரவு வந்தால் போதும்,*

*,, 1970 :* *அதோ கர்த்தரின் கோவிலில் மணி ஓசை கேட்கிறது. எனக்கு நேரமாகிவிட்டது. மணி 12—00 ஆகிவிட்டது. இனி நீயும் உனது உலகமும் பட்டபாடு. நான் நேரே சொர்க்கத்திற்குப் போகிறேன்.*

*,, 1971 :* *என்ன சொர்க்கத்திற்கா?*

*,, 1970 :* *ஆமாம். புதுவருடத்தை முன்னிட்டு மூன்று காட்சிகள் ''சொர்க்கம்'' படம் நடக்கிறது. நான் சென்று வருகிறேன். விஷ் யூ. ஆல் சக்செஸ்*

*,, 1971 :* *செரியோ! பாய்! பாய்!*

*,, 1970 :* *மை ஹப்பி நியூ இயர் கிறீற்றிங்ஸ் போர் யூ. (எனது புத்தாண்டு வாழ்த்துக்கள்)*

## ஒரு இரவு வருமானம் = ஒரு மாதம்

பிரான்சு நாட்டின் தலைநகரான பாரீசில் உள்ள இரவு கிளப்புகளில் வேலை செய்யும் பெண்கள் தங்களுக்கு வருமானம் குறைவு என்பதற்காக, இவர்கள் வார முடிவில் இங்கிலாந்தின் தலைநகரான லண்டனுக்குப் போய் ஒரு இரவினிலே, பாரீசில் ஒரு மாதம் உழைக்கும் வருவாயிலும் பார்க்க கூடுதலாக உழைக்கிறார்கள். இவர்கள் வாரத்தில் ஒரு நாள் மட்டுமே பல பல கிளப்புகளுக்கும் உல்லாச கேளிக்கை விடுதிகளுக்கும் போய் வருவதால் பொலீசாரால் இவர்களை நன்கு அடையாளம் கண்டுகொள்ள முடிவதில்லையாம்,



# உண்மைக்காக வாழ்வேன்

5

இ. நாகராஜன்

வண்டி நிறுத்தப்பட்டதும் வண்டியிலிருந்த அத்தனை பேர் விழிகளாகிய வண்டுகளும் சப்தம் எழுந்த திசையையே நோக்கிச் சுழன்றன.

அங்கே;

ஒற்றைச் சிலம்புடன் பாண்டியன் அரண்மனையில் நீதிக்காக நின்ற கண்ணகியை ஒப்ப நின்று கொண்டிருந்தாள் அந்தப் பெண்...

அந்தவேளை எவரும் எதிர்பாராத விதமாக அவள் அருகில் இருந்த இளைஞன் திடுமென வண்டியைவிட்டு இறங்கி பின் புறமாக ஓடினான்.

ஏன் அவன் ஓடுகிறான்?

சப்தம் என்ன என்ற கேள்விக் குறியுடன் அந்தப் பெண்ணையே பார்த்துக் கொண்டு நின்றேன்.

''காவாலிப்பயல், பெண்களுடன் கூடிப் பிறக்காத ஜென்மம்...''

இவ்வாறு அவளது வாய், வார்த்தைகளைப் பொரிந்து தள்ளிக் கொண்டிருந்தது.

எவருக்கும் விடயம் விளங்கவில்லை.

அவளது மேற்பற்கள் உதடுகளைக் கவ்விக் கொண்டிருந்தன.

அதன் காரணம்: அவள் கட்டுமீறிய சினத்துடன் இருக்கிறாள் என்பதே.

''ஏன் பிள்ளை என்ன நடந்தது?'' இவ்வாறு அந்தப் பெண்ணிருந்த ஆசனத்துக்குப் பின் ஆசனத்தில் இருந்தவர் அவளைக் கேட்டார்.

''ஒன்றுமில்லை. பெண்கள் தனித்து பஸ் வண்டியில் வரப்படாது. இந்தக் காவாலிகளின் தொல்லையை நீக்குவதற்கு வழி செய்யவேண்டும்?''

இவ்வளவுதான் அவள் சொன்னவை.

அதற்குமேல் அவள் எதையும் சொல்லவில்லை. பெண்ணல்லவா, நடந்ததை எப்படி வாய்விட்டுச் சொல்ல முடியும்? நாம் தான் ஊகிக்கவேண்டும்.

ஓடிக் கொண்டிருந்த வண்டியில் அந்தப் பெண்ணுக்குப் பக்கத்திலிருந்த இளைஞன் அவளிடம் தவறாக நடந்திருக்க வேண்டும். அதுதான் அவசரமாக இறங்கி ஓடியிருக்கின்றான்.

வண்டிச் சாரதி வண்டியை மீண்டும் ஓட்டத் தொடங்கினான்.

வண்டியிலிருந்தவர்கள் எல்லோரும் நடந்த சம்பவத்தையே பேசிக் கொண்டிருந்தனர்.

இப்போது அந்தப் பெண்ணுக்கு அருகில் ஒருவர் இருக்கக்கூடிய இடமிருந்தது, அதில் வேண்டுமானால் நான் சென்று

உட்கார்ந்து கொள்ளலாம். ஆனால் அப்படி நானிருக்க விரும்பவில்லை. ஏற்கனவே நடைபெற்ற சம்பவத்தின் பேருக வேதனையும் கோபமுமுடைய பெண்ணுக்கு அருகில் இருக்க என் போன்று நின்றுகொண்டிருந்தவர்கள் எவருமே உட்கார விரும்பவில்லை.

என்னுடைய மனதில் பிரச்சினைகள் கிளைவிடத் தொடங்கின. என்னதான் பண்பாடு, நாகரீகம் என்றெல்லாம் நாட்டின் மூலைக்கு மூலையாக பேசிக் கொண்டிருந்தாலும், நல்ல காரியங்கள் இந்த நாட்டில் அற்பமாகத்தான் நடைபெறுகின்றன. ஒரு பெண் தனித்துச் செல்ல முடியாதபடி நிலைமைகள் இருக்கின்றனவே.

நான்தான் இப்படி யோசித்தேனே தவிர அவள் அதுபற்றிச் சிந்திக்கவில்லை. ஆறுதலாக கையில் ஒரு புஸ்தகத்தை வைத்துப் படித்துக் கொண்டிருந்தாள். என்ன புஸ்தகமது என்று சற்றுக் கண்ணைச் செலுத்திப் பார்த்தேன்.

''ஆண்கள் ஜாக்கிரதை'' என்று அதில் எழுதப்பட்டிருந்தது. அது எந்தரகக் கதையோ? யார் கண்டது? இப்போதைக்கு அவள் ஆண்கள் மீது ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்பதை உணர்ந்து கொண்டுதான் அந்தப் புஸ்தகத்தை வைத்துக் கொண்டிருக்கிருளோ என்று யான் யோசித்தேன்,

நேரம் இப்போது கிட்டத்தட்ட ஏழரையைத் தாண்டிவிட்டது. வீதியோரத்தில் அமைந்திருந்த கடையொன்றின் பக்கத்தில் வண்டி நிறுத்தப்பட்டது. பிரயாணிகளிற் பலர் இறங்கி தேநீர், பலகாரம் புசிப்பதற்காகச் சென்றனர்.

யானும் இறங்கி கடையில் தேநீர் அருந்திவிட்டு வந்து, வண்டியில் அமர்ந்து கொண்டேன்.

ஆசனங்கள் பல இப்போது காலியாக இருந்தமையால் ஒரு ஆசனத்தில் குந்திக் கொண்டேன்.

நிமிடங்கள் கிட்டத்தட்ட பதினைந்து கழிந்து விட்டன. சாரதி வண்டியில் வந்து ஏறி ஹாரனை அழுத்தி சத்தமிட்டார். புற்றீசல் போன்று கடையிலிருந்து ஒவ்வொருவராக வந்து வண்டியிற் தொத்திக் கொண்டனர். நானிருந்த ஆசனத்திற்கு ஒருவர் வந்து ''இதிலே நான் உட்கார்ந்திருந்தேன்'' என்ருர்.

''சரி இருங்கள்'' என்று அவருக்குரிய ஆசனத்தை வழங்கிவிட்டு பழையபடி நின்று கொண்டிருந்தேன்.

வண்டியில் எல்லோரும் வந்து ஏறிக்கொண்டனர். மணி அடித்ததும் வண்டி ஓடத் தொடங்கியது.

நான் இன்னும் நின்று கொண்டே இருந்தேன். என்னைப் போல் இதுவரை நின்று கொண்டிருந்தவர்கள் எல்லோரும் அந்த இடத்திலேயே இறங்கிவிட்டார்கள்.

நான் மட்டுமே நின்று கொண்டிருந்தேன். என்னுடைய இடத்துக்கு அருகில்தான் அந்த பெண் இருக்கிருள்.

அந்தப் பெண்ணிருக்கும் ஆசனத்தில், அதுவரை அவள் அருகில் பிரயாணஞ் செய்தவர் கூட பஸ்வண்டி நிறுத்தப்பட்ட இடத்திலேயே இறங்கிப் போய் விட்டார்.

ஏனைய ஆசனங்களில் கணக்காகவே பிரயாணிகள் உட்கார்ந்திருந்தனர். ஆனால் மூன்று பேரிருக்கக்கூடிய அந்த ஆசனத்தில் அவள்மட்டுமே இருக்கிருள். இருவர் இன்னும் உட்காருவதற்கு வாய்ப்புண்டு, நான் நின்று

கொண்டே இருந்தேன். அந்த ஆசனத்தில் யான் உட்கார்ந்து கொண்டால் ஏதாவது பிரச்சினைகள் தலை தூக்கலாமல்லவா. அந்தப் பத்திரகாளிக்குப் பக்கத்தில் உட்காருவது தொல்லையை விலைக்கு வாங்குவதற்குச் சமனுகும்.

வண்டி ஓடிக் கொண்டிருக்கையில்,

''இந்த இடத்தில் ஒருவர் இருக்கலாம்'' என்றுள் அந்தப் பெண் என்னைப் பார்த்து.

அடேயப்பா பத்திரகாளி போன்று தடார் என்று ஒரு இளைஞனின் தாடையில் அறைந்த அந்தப்பெண் எவ்வளவு கனிவுடன் இதைச் சொன்னுள்.

எனக்குத் துணிச்சலில்லை. நான் அவள் கூறியதைக் காட்டிக் கொள்ளாது வண்டியின் முன்னே கவனித்துக் கொண்டே நின்றேன்.

''உங்களைத்தான் சொல்லுகிறேன், இங்கே ஒருவருக்குரிய இடம் வீணுகக் கிடக்கும்போது நீங்கள் ஏன் அநியாயமாகக் கால் உளைச்சலெடுக்க நிற்க வேண்டுமென்றுள்''

என்னுல் அவளது பேச்சை நம்பமுடியவில்லை.

அந்த இளைஞனைப் போல் நானும்...... இருப்பேனென்று அவள் கருதவில்லையா? என்னை ஒரு நியாயமான குணமுள்ளவன் என்று கருதிக் கொண்டாளா? வண்டி புறப்படும் போது நானும் அவளுந்தான் இந்த ஆசனத்தில் உட்கார்ந்திருந்தவர்கள். இடையில் கிழவி ஒருத்தி வண்டியில் ஏறிக் கொண்டதனுல் அந்த இடத்தைவிட்டு யான் எழும்ப நேர்ந்தது. ஆனுல் மீண்டும் அந்த இடத்தில் யான் இருக்க முடியாதவாறு அந்த இளைஞன் குறுக்கிட்டு விட்டான். இப்போது அவளே அழைக்கின்றுள்.

எம்மிருவருக்கிடையே நிகழ்ந்தவற்றை மற்றைய பிரயாணிகள் சிலரும் கவனிக்காமலில்லை...

அவர்களுட் சிலர் எம்மிருவரையுமே பார்க்கவும் செய்தனர்.

இதையெல்லாம் லட்சியம் செய்யாது அவளது வேண்டுகோளுக்கமைய ஆசனத்தில் அமர்ந்து கொண்டேன்.

அதிகாலையின் சீதளத்தை தன்னுடன் இணைத்து, காற்று வீசிக்கொண்டிருந்தது. கிழக்குத் திசையிலே இரத்தக் கோளமாக சூரியன் கிளம்பி வந்துகொண்டிருந்தான்.

என்னுடைய கவனம் இப்போது எங்குமில்லை. அந்த ஆசனத்திலிருந்தபடி கண்ணை வெளியிலேயே செலுத்திக் கொண்டிருந்தேன்.

வண்டியில் முந்தியது போன்ற நெருக்கடி இல்லை. நானிருக்கும் ஆசனத்தில் இப்போது இருவரும் மட்டுமே இருக்கின்றேம். ஆகையால் ஆரம்ப நிலையில் ஏற்பட்டது போன்ற, சங்கடப் படவேண்டிய எந்த நிலையும் எம்மிடையே உருவாகவில்லை.

வண்டி நகருகிறது. ''நீங்கள் எவ்விடத்துக்குச் செல்கின்றீர்கள்'' இப்படி அந்தப்பெண் என்னைக் கேட்டாள்.

வெளியே புலனைச் செலுத்திக் கொண்டிருந்த நான் என்னுடைய சிந்தனையை திருப்பிக் கொண்டு அவளைப் பார்த்தேன்.

மல்லிகை மொட்டுக்கள் போன்ற பற்கள் மெதுவாகத் தெரிய அவள் என்னைப்பார்த்தே கேட்கிறுள்.

இதற்குப் பதில் சொல்லாமல் எப்படி இருக்க முடியும்.

**40ம் பக்கம் பார்க்கவும்.**

# வர்ணங்களின் பதில்கள்...!

**இங்கு கூறப்படும் பதில்கள் எந்தவொரு தனிப்பட்டவருடைய மனத்தையும் புண்படுத்தும் நோக்கத்துடன் தரப்படுபவை அல்ல.**

பீ. எஸ். பரமேஸ்வரி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு

கே: லஞ்சப் பேயை ஒழிப்பது எப்படி?

ப: நாட்டில் பஞ்சத்தைப் போக்கினால்தான் லஞ்சத்தை ஒழிக்க முடியும். நாடு நலம் பெற்று இருந்தால், நாமாகக் கொண்டு போய்க் கொடுத்தாலும் கூட எவரும் லஞ்சம் வாங்க மாட்டார்கள். நம் நாட்டில் லஞ்சம் கொடுப்பதற்கு ஆட்கள் இருக்கும் போது லஞ்சம் வாங்கவா ஆட்கள் இல்லை.

ரி. ஆறுமுகம், காரைநகர்

கே: உங்கள் வானவில் பத்திரிகையின் விற்பனை எப்படி இருக்கிறது?

ப: நிமோனியாக் காய்ச்சல் பிடித்த நோயாளிக்கு ரெம்ப ரேச்சர் எப்படிக் கூடிக்கொண்டு போகுமோ அதேபோல் விற்பனை கூடிக்கொண்டு போகிறது. வானவில்லின் விற்பனைச் சுரத்தை எந்த டாக்டர்களாலும் நிறுத்த முடியாது.

கே: மனக் கவலையைப் போக்க என்ன செய்ய வேண்டும்?

ப: மதுவைக் குடிக்க வேண்டும் என்பர் மதுப்பிரியர். பரமனின் பாதத்தை நாடவேண்டும் என்பர் பக்தர்கள். காலம் கூடாது என்பர் கைரேகை சாஸ்திரிகள். ஆனால் எந்த விஷயத்தையும் சிறிது சிந்தித்துச் செயலாற்றினால் மனக் கவலையைப் போக்கலாம்.

எம். சிவநேசன், மாத்தளை

கே: மந்திரிகளால் சம்பளம் வாங்காமல் வேலை செய்ய முடியாதா?


ப: சம்பளம் மட்டும் வாங்காமல் சம்திங்கும் வாங்குவதற்குத் தானே மந்திரிப் பதவிக்கு வந்துள்ளனர். அன்றாட வாழ்க்கைக்கே தும்பட்டம் போடுபவர்கள் ஊதியம் இல்லாமல் வேலை பார்க்க முடியுமா? இன்று அரசியலும் ஒரு உழைப்புத்தானே.

செ. மனோகரன், மானிப்பாய்

கே: இலங்கை அரசாங்கத்துக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: இலங்கை அரசாங்கம் ஓர் தங்கப் பேழை. இந்திய அரசாங்கம் ஓர் வெள்ளிப் பேழை. இந்த

★★★★★★★★★★★★



**மாஸ்டர் :**

நேற்று உன்னைத் தியேட்டருக்குள் கண்டேன். எப்படிப் படம்.

**மாணவன் :**

இன்ரேவலுக்குப் பிறகு தான் சார் படம்.

**மாஸ்டர் :**

அப்ப இன்ரேவலுக்கு முதல் தியேட்டரிலை நாடகமா நடந்தது?

தங்கப்பேழையை இன்று எத்தனையோ அரசியல் சூதாடிகள் அபகரிக்கப் பார்க்கிறார்கள். தங்கப்பேழை யாரிடம் இருந்தாலும் அதற்குரிய மதிப்பு என்றும் குறையாது.

கே: இலங்கையில் பேய் உள்ளது என்று சிலர் கூறுகிறார்கள் அதற்கு உங்களின் பதில் என்ன?

ப: இலங்கையில் மட்டும் அல்ல உலகெங்குமே பேய்கள் என்ற போர்வையில் மனிதப் பேய்கள் இன்று ஹிப்பீஸ் என்ற பெயரில் உலாவுகின்றன. ஹிப்பீஸ் அலங்கோலத்தின் தோற்றமே பேய்த் தோற்றம்தானே.

வி. எஸ். தணிகாசலம்,
செட்டித்தெரு, யாழ்ப்பாணம்

கே: வாழ்க்கை பூராவும் டிம் போடுகிறவர்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: டிம்போடுகிறவர்கள் வாழ்வும் டிம்மாகவே இருக்கும் மயானத்தில் இவர்களின் மையம் எரியும் போதும் டிம்மாகத்தான் எரியும். தினமும் சாராய டிம் போடுகிறவர்களுக்கு அவர்கள் இறந்தபின் எரிப்பதற்கு விறகு தேவையில்லை. வாழ்நாள் முழுவதும் குடித்த சாராய ஸ்பிரிற்றிலேயே மையம் எரிந்துவிடும்.

கே: கள்ளைக் கண்டுபிடித்தவர் யார்?

ப: கள்ளைப் பற்றிப் பள்ளுப் பாடியோர் பலர். கள்ளைக் கண்டுபிடித்தவர் காத்தியன்ரை கொள்ளுப் பூட்டன் காந்தி என்று கற்கால சரித்திரம் கதை கூறுகிறது. இவருடைய வழித்தோன்றலில் வந்தவரா நீர்?

கே: சந்தோஷமாக வாழ என்ன செய்ய வேண்டும்?

ப: அளவுடன் பெற்று நிறைவுடன் வாழ வேண்டும். போதும் என்ற மனமே பொன் செய்யும் மனம். என்ற வாசகத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

ந. சகுந்தலா, யாழ்ப்பாணம்

கே: ஓலைக் குடிசையில் வாழ்ந்தாலும் உயர்ந்த மாடங்களில் வாழ்ந்தாலும் மாறாத பொருள் எது?

ப: அன்பு! அன்பு ஒன்றுதான் இன்பத்தை எங்கிருந்தாலும் தேடிக் கொள்ளும். உலகில் இன்று அன்புக்கு இருக்கும் சக்தி அணுக்குண்டுக்குக் கூட கிடையாது. அன்புதான் இன்பஜோதி என்று அசோகச் சக்கரவர்த்தியின் வாக்கியத்தைக் கேள்விப் படவில்லையா?

எஸ். எஸ். எம். தேவன்.
சட்டநாதர் வீதி, நல்லூர்

கே: சத்தியமே இலட்சியமாகக் கொண்ட தன்னிகரில்லாத தமிழன், தர்மத்தின் தலைவன் என்று எம். ஜி. ஆரை தம்பட்டம் தட்டித் திரியும் ரசிக்கத் தெரியாத தமிழ் ரசிகர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

### நடிகையின் வைரம்.

பிரபல ஹொலிவூட் நடிகையான எலிசபத் டெயிலர் அணிந்து கொண்டிருக்கும் வைரத்தின் பெறுமதி 1040000 பவுன்ட் = ரூபா 15600000 ஆகும். இதைவிட இவருடைய கணவர் றிச்சாட் பேட்டன் இங்கிலாந்தில் இருந்த அமரிக்க ஹைகமிஷனரின் மனைவியின் தங்கையான திருமதி போல் அனெம்பேக் ஏம்ஸ் என்பவரிடம் இருந்து 69 கரட் வைர மோதிரம் ஒன்றை எலிசபத் டெயிலருக்குப் பரிசளித்துள்ளார். இதன் மதிப்பு (436000 பவுன்ட்) 6480000 ரூபாவாகும். இவற்றைவிட வேறும் பல வைர நகைகளும் எலிசபத் டெயிலரிடம் உண்டு.

நோயாளி :

டாக்டர் சார். எனக்கு நோயை எப்படிச் செல்கிறதென்றே தெரியல்ல. நீங்கள் நோயை மட்டும் பரிசோதித்துச் சொன்னால் போதும், மருந்து அப்புறம் எடுக்கிறேன்.

டாக்டர் :

ஏன்? மருந்தையும் இப்பொழுதே தருகிறேனே.

நோயாளி :

மருந்து இப்ப வேண்டாம்! இன்னும் சில நாட்களுக்குள் மருந்துகளுக்கு எல்லாம் கட்டுப்பாட்டு விலை வந்துவிடுமாம் அதுதான்.



ப: எம். ஜி. ஆரை தர்மத்தின் தலைவன் என்று தம்பட்டம் தட்டித் திரிகிறார்களே ஒழிய நடிப்பின் சிகரம் என்று கூறவில்லை என்பதை உமது கேள்வியில் இருந்தே காண முடிகிறதே. கர்ணன், கொடுத்துக் கைசிவந்த குமணன் என அவருடைய கொள்கையைப் பற்றிக் கூறுவதில் தப்பில்லையே!

க. நல்லதம்பி, ஒட்டிசுட்டான்

கே: வயதானவர்களின் வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும்?

ப: இவர்களின் வாழ்க்கை பெரும்பாலும் வாக்கிங் செல்வதிலும் படிப்பிலுமே கழிய வேண்டும். இப்படிச் செய்வதனால் உடலுக்கும் நல்லது. உள்ளத்திற்கும் நல்லது.

ந. தேவதாஸ், மன்னார்

கே: எனக்கு இரவில் தூக்கம் வருவதில்லை. என்ன செய்வது?

ப: இரவு வாச்சர் வேலைக்கு விண்ணப்பிக்கலாமே! அரசியல்வாதிகளும் புகழ்பெற்ற நடிகைகளும்தான் இரவில் சரியாகத் தூங்குவதில்லை. இன்று நாடு கெட்டுக் கொண்டிருப்பது இவர்களால்தான். நீர் இவைஇரண்டு துறையிலும் இல்லாவிட்டால் நல்ல டாக்டருக்கு உடம்பைக் காட்டவும்.

ஜே. காந்திமதி,
ஊர்காவற்றுறை

கே: உலகில் பிரன்சு திரைப் படங்களின் நிலை எப்படி?

ப: எந்த நிலையைக் கேட்கிறீர்கள். ஆபாசத்திலா? அடல்ற்ஸ் ஒன்லியிலா? அல்லது... பிரன்சு மிகக் குறைவான படங்களையே தயாரிக்கிறது. இப்படங்கள் உலகம் முழுவதும் ஓடுவதில்லை. 95 விகிதம் ஐரோப்பாவிலே ஓடுகின்றன. பிரன்சுப் படங்களை விட இத்தாலியப் படங்களுக்கு நல்ல மதிப்பு இருக்கிறது.

டபிள்யூ. யேகப், இளவாலை

கே: இலங்கை அரசியல் வாதிகளின் போக்கு எப்படி இருக்கிறது?

ப: தேர்தல் சமயம், பாலைவனத்திற்கூடாக ஓடும் நதி போல் இருந்தது. பேச்சு தேர்தலுக்குப் பின் சாக்கடையில் ஓடும் தண்ணீர் போல் இருக்கிறது போக்கு.

நா, சபாநாயகம்,
வட்டுக்கோட்டை கிழக்கு

கே: இலங்கையில் பெண் பொலிஸ் நியமிப்பது பற்றித் தங்கள் கருத்து என்ன?

ப: தற்போது வாகன விபத்துக்களால் இறப்போரின் தொகை கண்டிப்பாக இரட்டிப்பாக இருக்கும். ஆங்கிலப் பாணியில்

உடுத்து அங்காடிகள் போல் தெரு வீதிகளில் திரியும் சுழட்டல் மன்னருக்கு பொழுது போக்குவதற்கு நல்ல வாய்ப்பாகவும் இருக்கும்.

எம். பரமேஸ்வரன்,
தம்பலகாமம்

கே: ஆம்ஸ்ரோங் சந்திரனில் காலடி வைத்தது சீன மக்களுக்குத் தெரியாதாமே?

ப: ஆமாம், சீன அரசாங்கம் அமெரிக்காவின் சாதனையை சீன மக்களுக்குத் தெரியா வண்ணம் இருட்டடிப்புச் செய்துவிட்டது. ஆனல் அமெரிக்க சாதனைகளை ரஷ்யப் பத்திரிகைகள் முன் பக்கத்தில் பிரசுரித்தன. சமீபத்தில் ரஷ்யா அனுப்பிய லூனு—17ன் சாதனையை சீனப் பத்திரிகைகள் பெரிய எழுத்தில் பிரசுரித்தன. இது சாதனையில் ஓர் வேதனை தரும் செய்தி.

கலைச்செல்வி, பூண்டுலோயா

கே: மலையாளத் திரைப்படங்கள் முன்னணியில் நிற்கின்றனவே!

ப: இன்று மலையாளப் படங்கள்; ஹிந்தி, வங்காளி, தமிழ்ப் படங்களுடன் போட்டி போடும் அளவுக்கு முன்னேறியிருக்கிறது. 'ஏழு இரவுகள்' என்ற மலையாளத்தில் வந்த படத்தில் இந்திய தேசியக் கொடியின் கீழ் விபச்சாரம் நடப்பதாகக் காட்டுகிறார்களாம். இப்படியான படத்தையும் எடுத்திருக்கிறார்கள் தானே! இப்படத்தைத் தயாரித்தவர் ஒரு கேரள கம்யூனிஸ்ட்டாம்.

வி. புஸ்பா, கந்தர்மடம்

கே: உலகில் எந்த நாட்டில் வரிகள் குறைவு?

ப: கனடாவிலும், சுவிற்சிலாந்திலும் தான் வரிகள் குறைவு. இதற்கு அடுத்தபடியாகத்தான் அமெரிக்கா. அமெரிக்காவில் வருவாய் அதிகம் ஆனல் வரிகள் குறைவு.

பெயர் இல்லை.

கே: உலகிலே கற்பனையால் படைக்கப்பட்டவை யாவை?

ப: கதைகள், கவிதைகள், கட்டுரைகள்தான் கற்பனையால் படைக்கப்பட்டவை — படைக்கப்படுபவை, இதைத்தவிர காதல் கடிதங்களும் கற்பனையால் படைக்கப்படுகின்றன.

கே: உலகில் மிகவும் பெரிய, சிறிய உயிர்கள் யாவை?

ப: துருவப் பகுதியை அண்டியுள்ள சமுத்திரத்தில் வாழும் ஒருவகைத் திமிங்கிலம்தான் உலகில் பெரிய பிராணி. மிகச் சிறியது அணு உயிர்.

கே: மாடு கதறும், சிங்கம் கர்ச்சிக்கும், கரடி என்ன செய்யும்?

## அடிமை வியாபாரம்

அழகான பெண்களையும், ஆண்களையும், சிறுவர்களையும் பிடித்து அரசாங்கத்திற்குத் தெரியா வண்ணம் இன்றும் அடிமை வியாபாரம் ஆபிரிக்காவில் நடைபெறுகிறது. இவ்வியாபாரம் சில ஏஜண்டுகளால் நைஜீரியாவின் தலைநகரான லாவோஸுக்கு சமீபத்தில் நடைபெறுகிறது. சென்ற வருடம் மெக்கா புனித யாத்திரைக்கு இங்கிருந்து சென்ற சுமார் 23000 பேரில் திரும்பி வந்தோர் தொகை 12000 மட்டுமே மிகுதியினரை அடிமை வியாாரம் செய்யும் ஏஜண்டுகள் அவர்களைப் பிடித்து விற்று விட்டார்களாம்.

நீதிபதி : உனங்கு இங்குள்ள யூரிகளைத் தெரியுமா?

குற்றவாளி : தெரியும் பிரபு.

நீதிபதி : முன்பே எல்லோரையும் தெரியுமா?

குற்றவாளி : இல்லைப் பிரபு இவ்வழக்குத் தொடங்கிய பின் தான் எல்லோரையும் தெரியும்.

நீதிபதி : அப்படியா? நான் வழக்கைத் தள்ளுபடி செய்கிறேன்,



---

ப: கரடி உறுமும். மிருகங்களைப் பற்றியே கேட்டுள்ளீர், ஏன் தெஹிவலை மிருகக் காட்சிச்சாலையில் வேலைக்கு மனுப்போட்டிருக்கிறீர் போலும்.

எஸ். யாதவன், மானிப்பாய்

கே: இலங்கையின் பொருளாதாரத்தை உயர்த்த என்ன செய்ய வேண்டும்?

ப: இலங்கை ஓர் தொழில் வளம் உள்ள நாடல்ல, தேயிலை, றபர், கொக்கோவையும் இனி நம்பியிருக்க முடியாது. நம் நாட்டை ஓர் விவசாய நாடாக்க வேண்டும். நம்ம நாட்டைப் போலவே ஓர் சிறிய நாடுதான் தாய்லாந்து. பிரதி வருடமும் தாய்லாந்து சுமார் 20 லட்சம் டன் அரிசியை வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்கிறது. இப்படியான நிலைக்கு நாம் என்று வருகிறோமோ, அன்றுதான் நமது பொருளாதாரம் உயரும். அப்போது நமக்கு ஏகப்பட்ட அன்நியச் செலவாணி மிகுதியாகும்.

பி. தயாபரன், பிரதான வீதி, கண்டி

கே: ரூபாயின் மதிப்பை மீண்டும் அரசாங்கம் குறைக்குமா?

ப: உலக வங்கி, இலங்கையின் நாணய மதிப்பைக் குறைத்தால் அன்றி, மேற் கொண்டு கடன் வசதி அளிக்க முடியாது என்று கூறிவிட்டது. தற்போது இறக்கு மதிப் பொருட்களுக்கு இருக்கும் 55 விகித பீக்ஸ் பணத்தை 70 விகிதமாக்கினுல்தான் நமக்குக் கடன் கிடைக்கும். இப்படிச் செய்தால் விலை வாசிகள் உயரும். இதனுல் நாட்டில் பெரும் இடையூறுகள் ஏற்படும். இதை யோசித்துத்தான் அரசாங்கம் இருதலைக் கொள்ளி எறும்பு போல இருக்கிறது. அரசாங்கம் ரூபாயின் மதிப்பைக் குறைத்தாலும் குறைக்காமல் விட்டாலும் ரூபாயின் மதிப்பு குறைந்து கொண்டே போகிறது.

ஜி. நரேந்திரன், சாவகச்சேரி

கே: மனிதனுல் அடக்க முடியாதது எது?

ப: பசி ஒன்றைத்தான் மனிதனுல் அடக்க முடிவதில்லை. பசியிலும் பல ரகப் பசிகள் இருக்கிறது. அந்தந்தப் பசிக்கு அவை அவற்றைப் போட வேண்டும். ஆனுல் இவை எல்லாப் பசியும் வயிற்றுப் பசி இல்லாவிட்டால் தான் உண்டாகும்.

எம். நாகநந்தினி, பூணுகலை. பண்டாரவளை

கே: ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தமிழரைப் பரிபூரணமாக ஆதரிப்பாரா?

ப: பரிபூரணமாக எப்படி ஆதரிக்க முடியும். 87 விகித சிங்கள மக்களால் தெரிவு செய்யப்பட்டவர், தமது பரிபூரண ஆதரவை புத்தசமய மக்களுக்கே கொடுப்பார். ஏதோ சில சலுகைகளும் எமக்குக் கிட்டக்கூடும்.

எம். தருமலிங்கம், குருணுகல்

கே: சிவாஜிக்கா, எம். ஜி. ஆருக்கா அதிக வருமானம்?

ப: சமீபத்தில் இந்தியப் பத்திரிகை ஒன்றில் வருமானவரி சம்பந்தப்பட்ட பட்டியலை நோக்கும் போது சிவாஜியை விட எம். ஜி. ஆர் தான் கூடுதலாக வருமானவரி கட்டுகிறார். இதில் இருந்து சிவாஜியைவிட எம். ஜி. ஆருக்குத்தான் வருமானம் கூடுதல் என்பது தெளிவாகத் தெரிகின்றதே.

பீ. சிவகுமாரன், கல்முனை

கே: மேல் நாடுகளில் திமிங்கிலப் பண்ணை வைத்திருக்கிறார்களா?

ப: உலகில் பல நாடுகளில் திமிங்கிலத்தில் இருந்து கிடைக்கும் பல பொருட்களுக்கு இன்று ஏகப்பட்ட கிராக்கி இருந்து வருகிறது. திமிங்கிலத்தில் இருந்து கிடைக்கும் பொருட்களின் விலையும் மிக மிக அதிகம். இதனால் ஜப்பான் ஒரு திமிங்கிலப் பண்ணையை வைக்கலாம் என்று யோசித்து வருகிறது. விரைவில் அவர்களது யோசனை செயல்படும் என நம்பலாம்.

சீ. ஜெயராஜ், செங்கல்லடி

கே: குருஷேவ் இப்போ எங்கிருக்கிறார்?

ப: ரஷ்யாவில்தான் இருக்கிறார் என்று வருடத்திற்கு ஒரு முறை செய்தி வந்து கொண்டிருக்கிறது. கம்யூனிஸ்ட் அல்லாத நாடுகள் எல்லாம் இவரை என்றும் மறக்க மாட்டார்கள். மனிதருக்கு மத்தியில் மாணிக்கமாய் விளங்கியவர், விரைவில் கடவுளிடம் போய்ச் சேர்ந்து விடுவார்.

கே. சீ. காந்தரூபி,
கந்தரோடை

கே: 1971 எப்படி இருக்கும்?

ப: யாருக்கு? முதலாளிமாருக்கா? தொழிலாளருக்கா! காதலருக்கா? காந்திக்குல்லா அணிபவருக்கா? அல்லது....... பொதுவாக 1971 ஓர் தொழிலாளர் வருடமாகவே இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. நாம் சொல்லவில்லை அரசாங்கம் கூறுகிறது.


உங்களின் தேவைக்குரிய :

இரும்புக் கம்பிகள்

இரும்பு வலைகள்

மற்றும்

இரும்புச் சாமான்களுக்கும்

இன்றே விஜயம் செய்யுங்கள்.

திருப்பதி ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

9, மொம்ஸாக் பில்டிங், ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.



# ஒளியும் வழியும் நானே!

செல்வி, சி. யோகம்.

இறைவனின் படைப்பால் இப் பாரினில் தோன்றிய முதல் மனிதன் கட்டிக்கொண்ட பாவக்கறை, அம் மனிதனின் வழித் தோன்றல்களாகிய நம் அனைவரிலும் படிந்தது. அப் பாவக்கறையை நீக்க இரக்கமே உருவான பரமபிதா ஓர் உலக இரட்சகரை அனுப்பினார். வருவார் வருவாரென வழிமேல் விழி வைத்துப் பார்த்திருந்த அந்த இரட்சகர் இதோ! இவ்வாண்டிலும் நம்மை மகிழ்விக்கப் பிறந்துவிட்டார்.

''ஒளியும் வழியும் நானே! என் பின் செல்கிறவன் இருளிலே நடவாமல் ஒளியைக் கொண்டிருக்கிறான்'' என்றார் யேசு. உண்டானது சுடரொளி. காரிருள் மறைந்தது. அந்த ஒளியின் சுடராய் இப் பூவுலகில் விழியின் விழியாய்ப் பிறந்தார் யேசு. அந்த இறைமகன் ஒளியைக் கண்டு நாமனைவரும் இன்பம் எய்தினோம். யேசு உதித்த நாள் ஒளி பிறந்த நாள். வழி கிடைத்த நாள். கிறிஸ்துவின் உதய விழாவைக் கொண்டாட இதோ! அனைத்துலகும் ஆர்ப்பரித்து நிற்கின்றது. மார்கழி பிறந்து விட்டால், கத்தோலிக்கப் பெருமக்கள் மகிழ்ந்து விடுவர். காரணம்; அன்னை மரியின் அற்புதப் பாலன் பிறந்த மாதமல்லவா? நாமும் இவ்வற்புத நாளிலே புனிதத் தன்மையைப் புரிந்து கொண்டு அவரின் உன்னத பிறப்பினால் ஆட்கொள்ளப்படுவோமாக!

யேசுவின் அருளால் பாவ இருள் அகலட்டும், உண்மை ஒளி பரவட்டும், உலகமே பரிசுத்த ஞானத்தில் வளரட்டும், எங்கும் மகிழ்வு பொங்கட்டும்!

## நான்காம் வகுப்பு இல்லையே!

இங்கிலாந்தின் முன்னைய பிரதமர் கிளாஸ்ரன் ஒருமுறை சாதாரண சனங்களைப் போல் புகையிரத வண்டியில் மூன்றாவது வகுப்பில் பிரயாணம் செய்தார். கூட ஏறியிருந்த ஒருவர் பிரதமர் என்று அவரைக் கண்டுகொண்டு ''தாங்கள் மூன்றாவது வகுப்பு வண்டியில் ஏன் பிரயாணம் செய்கிறீர்கள்'' என்று ஆச்சரியத்துடன் கேட்டார். அதற்குக் கிளாஸ்ரன் ''நான்காம் வகுப்பு என்று ஒன்றிருந்தால் அதில் ஏறியிருப்பேன். அது இல்லாத படியால்தான் மூன்றாவதில் ஏறவேண்டி வந்தது'' என்று கூறினார்.

32ம் பக்கத் தொடர்ச்சி :

## உண்மைக்காக வாழ்வேன்....

''கிளிநொச்சி வரை செல்கின்றேன்''

''அங்கேதான் வேலையோ''

''இல்லை''

''அப்போ?''

''இனிமேல் அங்கு வேலை செய்யலாம் என்று எதிர் பார்க்கின்றேன்''

அவள் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருக்கிருள். நான் மறுமொழியைச் சொல்லிக் கொண்டிருக்கின்றேன். இந்த நிலையில் நானும் ஏதாவது கேள்விகள் கேட்கத்தானே வேண்டியுள்ளது. எனவே, நான் அவளைப் பார்த்து ''நீங்கள் எங்கே போகின்றீர்கள்?'' என்ற கேள்வியைக் கேட்டேன்.

''நானும் கிளிநொச்சிக்குத்தான் செல்லுகின்றேன்''

''அங்கு ஏதாவது வேலை செய்கின்றீர்களா?''

''இல்லை. அங்குதான் என்னுடைய பெற்ருேர் இருக்கின்றனர்''

''உங்களைப் பார்த்தால் படித்த பெண்ணுக இருக்கின்றீர்கள். ஏதாவது தொழிலில் இருப்பீர்கள் என்று கருதினேன்''

''கொஞ்சம் படித்திருக்கின்றேன். ஏதாவது தொழில் செய்யலாம்தான். அந்த வாய்ப்பு இது வரை கிடைக்கவில்லை''

''முயற்சிக்கலாமே''

''முயற்சிக்கலாம். அந்த முயற்சியை நான் மட்டும் செய்ய முடியுமா?''

''ஏன்? வேறு உதவி செய்யக் கூடியவர்கள் இல்லையா?''

''இல்லை, என்னுடைய தந்தையும் தாயும் இந்த உலகத்தை நல்லாக புரிந்து கொள்ளாதவர்கள். விவசாயத்தையே நம்பியுள்ளவர்கள், என்னை யாழ்ப்பாண மகளிர் கல்லூரி ஒன்றில் படிப்பித்தனர். ஆனல் படிப்பிக்க முடிந்தது தவிர உத்தியோகம் பெற்றுத்தர அவர்களால் முடியவில்லை...''

இவ்வாறு தொடர்புற்று சம்பாஷணை நீண்டு சென்றது.

(தொடரும்)


---

### வேலைக்காரன்.

மொகலாயச் சக்கரவர்த்தி அக்பரின் மந்திரிகளில் பீர்பால் என்னும் விகடகவியும் ஒருவர். ஒருநாள் அக்பர் கத்தரிக்காயைப் புகழ்ந்தார். அப்போது பீர்பால், 'ஆம் அது சுவையானது. உடம்புக்கு நல்லது அதனுல்தான் சனங்கள் கத்தரிக்காயை அதிகமாகப் புசிக்கின்ருர்கள்' என்ருர். பின் ஒருநாள் அக்பர் கத்தரிக்காயை நிந்தனை செய்தார். பீர்பால் 'ஆம் அதனுல் பல வியாதிகள் உண்டாகின்றன. அது வாதமுள்ளது. ஜனங்களுக்கு கூடாது' என்ருர்.

உடனே அக்பர் 'நீ பெரிய புழுகனுய் இருக்கிருய். ஒரு நாளைக்கு நல்லதென்கிருய் ஒரு நாளைக்கு கெட்டது என்கிருய்' என்ருர். அதற்கு பீர்பால் நான் தங்கள் வேலைக்காரனே ஒழிய, கத்தரிக்காயின் வேலைக்காரன் அல்ல என்ருர்.

# இசைத்தட்டு



**ஆர். கனகரட்ணம்**

"மாலதி! மாலதி! இங்கே வாயேன்" மங்களத்தம்மாள் குரல் கனிவோடு ஒலித்தது.

"இதோ! வந்துவிட்டேன் அம்மா"

மாலதி நிலைக்கண்ணாடியை விட்டு பிரியமுடியாமல் தன் உருவத்தை பல கோணங்களில் திருப்பிப் பார்த்தாள். நாணத்தோடு கலந்த சிறு நகையில் முல்லை அரும்பென்னும் பற்கள் செம்பவள இதழின் ஊடே தெரிய, நடுவகிடு எடுத்து வாரி விட்ட கூந்தலை பின்னியிருந்தாள். மை தீட்டாமலே புருவங்கள் நீண்டு, வில் போல் வளைந்து இருந்தன. இமைகள் சிட்டுக்குருவி போல் பட்பட்டென்று துடித்தன. நீல நிறப் பிடவை அவள் பொன்நிற மேனியை மூடி மறைத்தாலும், இடை இடையே கண்ணைச் சிமிட்டிய அவள் மேனியின் அழகு கை வந்த கலைஞன் வடித்தெடுத்த தென்னாட்டு சிலையென நின்றிருந்தாள்.

மாலதி அலங்காரத்தில் அவ்வளவு நாட்டமுடையவள் அல்ல. இன்றைய நாள் அவள் வாழ்க்கையில் மறக்க முடியாத திருநாளாகும். மனதில் எழும் ஆயிரம் எண்ணங்களிடையே அவள் தன்னை அலங்கரித்துக் கொண்டாள்.

அவளது இதயம் சிந்தனையை பின்னோக்கி ஒடவிட்டது.

மாலதியும் மகேந்திரனும் நவநாகரீக உலகில் பருவக் கோளாறினால் காதல் என்னும் போர்வையில் மறைத்து வாழும் இன்றைய காதலர்கள் போல் இல்லாமல் சிறுவயது முதல் பிஞ்சு உள்ளங்களால் ஒன்றிவிட்ட காதலர்கள்.

குறும்புக்கார அத்தைமகன் மகேந்திரன் அழைத்து செல்லாவிட்டால், பள்ளிக்கூடமே போகமாட்டாள் மாலதி. குறும்புத்தனம் செய்து இழகிய இதயத்தைப் புண்பட வைத்து, மாலதியை அழச்செய்து வேடிக்கை பார்ப்பதில் அலாதி விருப்பமுடைய மகேந்திரன், படிப்பில் மிக கவனம் செலுத்தினான். மாலதியின் படிப்பு மந்தமாக இருந்தாலும் நற்பண்பும், பயந்த சுபாவமும் பெற்று இருந்தாள்.

ஒருநாள் சோ என பெரும் மழை பெய்ய, நனைந்தபடி இருவரும் பள்ளியில் இருந்து இல்லம் வந்தார்கள். வீட்டின் கதவைப் படார் படார் என தட்டினான் மகேந்திரன். கதவைத் திறந்த மங்களத்தம்மாள் குழந்தைகளைக் கண்டு பதறிப் போனாள்.

"ஏன்டா மகேந்திரன் மழை நின்றதும் வரப்படாதா? இப்படி நனைந்து வந்து இருக்கிறீர்களே, உடம்புக்கு ஏதும் வருத்தம் வந்தால் என்ன செய்வது" என்றாள் மங்களத்தம்மாள். மகேந்திரன் ஒன்றும் சொல்ல முடியாமல் விழித்தான். மாலதியோ "மகேந்திரனால்தான் நனைந்தேன், இல்லாவிட்டால் நான் நனைய மாட்டேன்" என்றாள்.

அச்சமயம் இடி முழக்கத்துடன் பளீச்சென்று மின்னல் மின்

ஹோட்டல் வெயிற்றர் : நேற்று இரவு உங்களுக்கு குடிபோதை மிகவும் கூடிப்போச்சு இல்லையா சார்!

மனேஜர் : ஆமாம்! அதனுல்தான் மேல் மாடியில் இருந்த பீப்பாவை கீழே தள்ளிவிட்டேன்.

ஹோட்டல் வெயிற்றர் : ஆ! அப்படியா? அப்போ நான் எங்கு போயிருந்தேன்......?

மனேஜர் : நீ ஒரு இடமும் போகவில்லை. பீப்பாவுக்குள்ளே தான் இருந்தாய்.

---

னியது. அவனது மனதிலும் ஒரு மின்னல் மின்ன,

''அத்தே கண் தெரியல்ல'' என்று கத்தினுன்.

இதைக்கேட்ட மாலதியும் ''வீல்'' எனக் கத்தினுள்.

அவள் பின் அலறவேயில்லை. மயங்கித் தரையில் வீழ்ந்துவிட்டாள். மங்களத்தம்மாள் இருவரையும் பார்த்தபடி நிலைகுலைந்து தடுமாறினுள். அசைவற்றுக் கிடந்த மாலதியைப் பார்த்து மகேந்திரனின் உள்ளம் பகீர் எனப் பயத்தை ஏற்படுத்திக் கொண்டது.

''அத்தை எனக்கு ஒன்றுமில்லை. கண் நன்ருக இருக்கிறது. விளையாட்டுக்குத்தான் சொன்னேன். நான் இனிமேல் இப்படி சொல்ல மாட்டேன். மாலதி என்னைக் கொஞ்சம் பார்'' என மாலதியை அணைத்துக்கொண்டு கதறினுன்.

டாக்டரின் வருகைக்குப் பின் மாலதி கண் திறந்தாள். இது கண்டபின் மங்களத்தம்மாளுக்கும் மகேந்திரனுக்கும் சென்ற உயிர் திரும்பி வந்தது போல் இருந்தது. அவள் மீண்டும் தன்னைப் பார்த்து மயங்கி விடுவாளோ என்ற பயத்தில் ''மாலதி எனக்கு ஒன்றுமில்லை. நான் நல்லாகத்தான் இருக்கின்றேன்'' என்ருன்.

காலமகள் காத்திருக்கவில்லை. அவளும் உருண்டோடிப் பல வருடங்களைக் கடந்து விட்டாள்.

எஸ். எஸ். ஸி. படிப்போடு மாலதிக்கு பள்ளி வாழ்வு முடிந்தது. மகேந்திரனே எம். பி. பி. எஸ். பட்டத்தோடு விசேட டாக்டர் படிப்புக்காக லண்டன் சென்ருன். அன்று விமான நிலையத்தில் இருவரும் கடைசியாக சந்தித்த பார்வை அவள் இதயம் என்றும் மறக்காது.

''உங்களுக்காக ஒருத்தி இங்கே இருக்கிருள்'' எனச் சொல்ல நினைத்தவள், சொல்ல முடியாமல் உள்ளம் விம்மியது. இதைப் புரிந்து கொண்டவன் போல் அவனது கண்களிலும் நீர் கரை தட்டியது.

இருவரின் நிலைமையைப் புரியாத விமானம் ஓரவஞ்சகத்தோடு மகேந்திரனை சுமந்து கொண்டு கிளம்பிற்று. விமானத்தைப் போலவே மாலதியின் உள்ளமும் விண்ணில் பறந்தது.

மாலதி அச்சடித்த பதுமையாக நின்ருள்.

''மாலதி வாம்மா வீட்டுக்குப் போகலாம்'' என்ற மங்களத்தம்மாள் மகளின் நிலையைக் கண்டு வேதனைப்பட்டாள்,

தாயின் குரல் கேட்டு சுய நினைவுக்கு வந்த மாலதி, நடக்

கும் யந்திரம் போல் தாயின் பின் சென்றுள்.

எப்படியோ நான்கு வருடங்களாக இதயக்கோவிலில் மகேந்திரனின் உருவத்தை வைத்துப் பூஜித்தாள். இன்று நேரில் வரும் தன் இதயக்கோவிலின் தெய்வத்தைக் காணப்போகும் ஆசை ஒருபக்கம், தன்னேடு நேரடியாகப் பேசும் போது தான் என்ன செய்வது என்று புரியாத மயக்கம் ஒருபக்கம். இப்படி அவளைச் சிந்தனையிலும் அழகு படுத்துவதிலும் அப்பொல்லாத மகேந்திரனின் உருவம் ஆட்டிப் படைத்தது.

பிரிவினுல் வாடிய நாட்கள், ஏங்கிய இரவுகள் எத்தனை. அப்பொழுதெல்லாம் தான்பட்ட வேதனையை அவனிடம் கதை கதையாகச் சொல்ல வேண்டும் என்ற எண்ணங்கள், அவள் இதயத்தை முழுவதும் பிடித்துக் கொண்டன.

''மாலதி, எள்வளவு நேரம் தான் நான் கூப்பிடுவது. வேலைகள் எவ்வளவோ கிடக்கிறது. கொஞ்சம் ஒத்தாசை பண்ணம்மா'' என்றவாறு அறைக்கே வந்த மங்களத்தம்மாள், மாலதியைக்கண்டு பிரமித்துவிட்டாள். தன்மகள் இவ்வளவு அழகாக அலங்கரித்து இருப்பதை முதன் முதலாகக் கண்டு திகைப்புற்றுள். தாயைக்கண்ட சேய் ஓடிச் சென்றுமுழந்தாளிட்டு மங்களத்தம்மாளின் பாதங்களைத் தொட்டாள்.

மங்களத்தம்மாளின் நாதழுதழுக்க ஆனந்த மேலீட்டில், ''அம்மா மாலதி என்றும் நீடூழி வாழ்வாய். தெய்வம் ஒரு குறையும் வைக்காது'' என கூறினுள்.

தாயின் அணைப்பில் மாலதி பத்து வயதுச் சிறுமியானுள். கண்ணில் மல்கிய நீரைத் துடைத்த வண்ணம் அமைதியை கலைத்து ''மாலதி! அப்பா எயர் போட்டுக்குப் போய்விட்டார். வரும் நேரமாகிவிட்டது. சிற்றூண்டி வகைகளை முடித்துவிட்டால் நல்லது'' என்றுள்.

வெளியே கார் ஹோன் சத்தம் கேட்டது. துடித்துப் போனுள் மாலதி. நொடிப் பொழுதில் அவள் முகத்தில் எத்தனை பாவங்கள். மங்களத்தம்மாள் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, வாசல் பக்கம் ஓடினுள். மாலதிக்கோ துணிவு எல்லாம் ஓடி ஒழித்துக்கொண்டது. எங்கிருந்துதான் நாணம் வந்ததோ. அம்மாவின் நிழலாக மறைந்து கொண்டாள்.

காரில் இருந்து சச்சிதானந்தம் மட்டும் இறங்கினுர். வேறு யாரும் காரில் இருக்கவில்லை. மங்களத்தம்மாளுக்கு கேள்விக் குறி தோன்றியது. மாலதிக்கு ஏக்கத்தால் விழிகள் விரிந்து நின்றன.

**கண்களில் காந்தம்.**

ரஷ்யாவில் உள்ள ஒரு பெண் ஒரு கடிகாரத்தைப் பார்த்து, அது நிற்க வேண்டும் என்று அவள் நினைத்தால் அந்தக் கடிகாரம் நின்று விடுகிறது. ஓடவேண்டும் என்று அவள் நினைத்தால் கடிகாரம் ஓடுகிறது. எந்தப் பொருளையும் தன் கண்களாலேயே நகர வைக்கிருள் இந்த அதிசயப்பெண். இவளைப் பரிசோதித்த டாக்டர்கள் இவளின் மூளையில் உள்ள மின்சார சக்திதான் இதற்குக் காரணம் எனக் கூறியுள்ளனர்.

சோபாவில் அமர்ந்த சச்சிதானந்தத்தின் முகத்தில் கவலையின் ரேகைகள் படர்ந்திருந்தன. ஏதும் கேட்க முடியாத நிலையில் இருவரும் தவிக்க,

''அம்மா மாலதி! இங்கே வா'' என சச்சிதானந்தத்தின் ஒலி அமைதியாக ஒலித்தது.

''இன்னும் இரண்டு வருடம் மேல் படிப்பு படிக்க அமெரிக்கா போகிறுன். இங்கு வர முடியவில்லை. இந்த இசைத்தட்டை உன்னிடம் கொடுக்கச் சொன்ஞன்'' என உயிர்த்துடிப்பின்றி கூறிஞர்.

''அவர் எப்படி இருக்கிருர்'' எனக் கேட்ட மாலதிக்கு, சச்சிதானந்தம் பெரு மூச்சோடு பதில் சொன்ஞர்.

நல்லாக உடுத்து கண்ணுக்கு கறுப்புக் கண்ணுடி, கையில் வோக்கிங் ஸ்டிக், மொத்தத்தில் நம் நாட்டவன் எனக் கூறமுடியாது. கூடவே ஒரு வெள்ளைக்காரப் பையனும் இருக்கின்றுன்.

அந்த இசைத்தட்டை பார்த்தபோது, அது ஒரு தமிழ் பட இசைத்தட்டு. அவள் ஆங்கிலப்பட இசைத்தட்டு என கருதியவள், இதைப் பார்த்து சற்று தளர்ந்தாள். தங்கப் பதுமைப் படத்தில் ஜெயராம் பாடிய பாடலை ஏன் தனக்குத் தரவேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியது. வேறு பரிசுப் பொருள் கிடைக்கவில்லைப் போலும் அத்தானுக்கு. எல்லாமே பெரும் புதிராக இருந்தது.

றெக்கோட் பிளேயரில் இசைத்தட்டை இசைக்க விட்டதும் ஜெயராமனின் குரலில் ''மனிதன் ஆரம்பமாவது பெண்ணுக்குள்ளே, அவன் ஆடி அடங்குவது மண்ணுக்குள்ளே'' என ஒலித்தது. கேள்விக்கு பதில் சொல்லும் அப்பாடலில் ஏற்படும் நிலைமையை மாலதி படத்தின் மூலம் உணர்ந்தாள்,

மகேந்திரன் பாடத் தான் கேள்வி கேட்பது போல் ஒரு உணர்வு. அவ் உணர்வில் விழங்காத புதிர் விளங்கியது. மாலதியின் உள்ளத்துடிப்பும் வேகமாகியது. முகத்தில் வியர்வை அரும்ப உடல் வெப்பத்தை ஏற்படுத்த, நாடித்துடிப்பு அதிகரிக்க, உள்ளத்தில் பயங்கரமான எண்ணங்கள் எழும்ப; அப்படியாஞல் அத்தான் கண்களை இழந்து விட்டாரா? என்ற கேள்வி அவள் உள்ளத்தை கேட்டதுமில்லாமல் இதயத்தை மீண்டும் இயங்கவிடாது நிறுத்திவிட்டது.

இசைச் சத்தம் நின்றது. ஆஞல் மகளின் சத்தத்தைக் காணுது அங்கு சென்ற சச்சிதானந்தத்திற்கு தூக்கிவாரிப் போட்டது மாலதி கிடந்தநிலை. தன்னை அறியாமலே மாலதி எனக் கத்திஞர். சத்தம் கேட்டு வந்த மங்களத்தம்மாள் இருவரையும் பார்த்து அலறிஞள். மகளின் கையில் இருந்த இசைத்தட்டு உறையை எடுத்தபோது, அதில் இருந்து விழுந்த கடிதத்தைப் படித்துவிட்டு விசும்பி விசும்பி அழுதார்.

அவனுக்கு கண் பறிபோய் விட்டது என சச்சிதானந்தம் கூறும் போது அதைக் கேட்க மாலதியின் உயிர் பொறுத்து இருக்கவில்லை.

---

இவ்விதழில் இடம்பெறும் கதை, கட்டுரை, கவிதைகளில் காணப்படும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே.

● அட்டைப்படம்.

Sri Ram

# ஸ்ரீ சத்தியா அருள்மொழி.

த. பாக்கியராஜா

இன்று வெளியுலக பார்வைக்கு, மனித தத்துவம் நிறைந்தவர்களாக மக்கள் தோற்றமளிக்கும் போதும் அவர்கள் மனித தத்துவக் குறைபாடு உள்ளவர்களாக அல்லது இராட்சத குணமுடையோராக இருக்கின்றனர். தருமமே செய்யாதவனை தருமவான் என்றும் செந்தண்மை இல்லாதவனை அந்தணன் என்றும் போற்றுகின்றார்கள். அந்தணனும் தருமவானும் மனித தத்துவம் குறைந்தவர்களிடையே கலந்துள்ளனர்.

ஆயினும், மனிதத் தன்மையற்றோர் மதிப்பில் உயர்ந்து, அதிகாரத்தோடு ஆட்சிபுரிகின்றனர். இதனால் மனிதன் தன்மாட்சி கெட்டு அதிகாரத்தையும், சிறப்பையும் இழந்து வாழ்கின்றான். இவற்றையெல்லாம் அவன் மீண்டும்பெற்று மனித தத்துவம் நிறைந்தவனாக வாழ்வதற்கு சாதனையே சிறந்தது. விடாமுயற்சியோடு சாதனை புரிந்து, உங்களைப் பரிசுத்தவர்களாக்குக.

இப்பொழுது முதலே சாதனையை மேற்கொள்ளுக. பக்தி உங்களுக்கு பொறுமையையும், சகிப்புத் தன்மையையும் கொடுக்கட்டும். உங்கள் வயது முதிரட்டும் என்று சாதனைபுரிய காத்திருக்க வேண்டாம். இப்பொழுது முதலே காலம் கடத்தாது ஆரம்பியுங்கள். சாதனை இளமைமுதலே ஆரம்பிக்கப்பட வேண்டியது. பல்லாண்டுகளுக்குப் பாவம் சூழும் மட்டும் காத்திருக்காது, அவதானத்தோடும் நுணுக்கமாகவும் உங்கள் உள்ளத்திலேயே நம்பிக்கையை வளருங்கள். நம்பிக்கை உங்களுக்குத் தென்பூட்டும். சக்தியும் உங்களைப் பாதுகாக்கும். என்னிடம் வாருங்கள், நான் உங்களை அன்போடு வரவேற்று, ஆசீர்வதித்து, உங்களுக்கு வழிகாட்டியாக விளங்குவேன். எல்லா வேதங்களும் — எல்லா சமய நூல்களும் — கீதையும், உபநிஷதம் என்னும் பசுக்களிடமிருந்து கறக்கும் பாலாகும். அந்தப்பாலை அருந்தி உங்கள் தாகத்தைத் தீருங்கள்.

பிரம்ம மார்க்கம், தர்ம மார்க்கம், ஆகிய இரண்டு வழிகளாலும் இவ்விரண்டையும் துடுப்புக்களாகக் கொண்டு, பிறப்பு-இறப்பு என்னும் சமுத்திரத்தைத் தாண்டிப் பரிபூரணம் எய்துங்கள்.

# வானவில்லின் வர்ணங்களோடு வாசகர்கள்.

தமிழ் வாசகர்களுக்கு வானவில் ஒரு நல்ல விருந்து. ஈழத்து இதழ்களில் மிக திறம்பட தொகுத்து வெளியிடும் வானவில் ஆசிரியர்கள் இருவருக்கும் என் மனமார்ந்த நன்றி.

திருகோணமலை. கே. செல்லையா

கலைப் பொக்கிஷமான வானவில்லில், கவிஞர் இ. நாகராஜன் எழுதும் ''உண்மைக்காக வாழ்வேன்'' என்னை மிகவும் கவர்ந்து விட்டது. வானவில் நீடுழி வாழ்க.

சுன்னுகம். கா. சதானந்தன்

நல்ல கருமமொன்றை நாட்டிற் செயற்படுத்த முளைந்துள்ள தங்கள் உள்ளப் பாங்கினையும், செயல்படுத்தும் திட்டத் திண்மையையும் எண்ணி மகிழ்கின்றேன்.

கல்முனை-3. பூபால்

வளம்மிகு வானவில்லே! உன் உடற்கட்டும். அங்கங்களும் சிறப்பு மிகுந்தவையாக மிளிர்கின்றன. ஒரு சில எழுத்துப் பிழைகள் மாத்திரமே தென்படுகின்றன.

மண்டைதீவு. சி. சந்திரபாலு

தமிழ் மக்களின் இலக்கியச்சுவை ஏடான வானவில்லில் போட்டிகளை நடத்தி, புதிய அம்சம் ஒன்றைத் தொடருங்கள்.

மானிப்பாய். மு. வே. சிவஞானம்

வானவில் இதழின் விடய தானங்கள் சுவை குன்றுமல் இதழுக்கு இதழ் கருத்தைக் கவருகின்றன. கதைகளுக்குப் படங்களையும் பிரசுரியுங்கள்.

திருக்கேதீச்சரம். ந. கதிர்காமத்தம்பி

அட்டைப் படங்களைக் கவரும்படி வெளியிடவும்.

ஹோர்வூட். என். கருப்பையா

தீபாவளி மலர் வெகு ஜோர். வானவில்லில் கதைகளுக்கு ஓவியங்களைப் புகுத்தினுல் நன்றாக இருக்கும். இவ்விதழ் என்றும் அதிக பக்கங்களுடன் மாதம் இருமுறை வெளியிட்டால் நன்று.

கொழும்பு-14 சி. புஸ்பநாதன்

வானவில்லின் வர்ணங்களில் ஒன்றான நட்பு மன்றம் வெளிநாட்டு நண்பர்களுடன் தொடர்பு ஏற்படுத்தியதற்கு நன்றி.

ஊர்காவற்துறை. ச. தாசன்

மார்கழி இதழில் வந்த சண்டியூர் சகா எழுதிய ''பொய்யா சொன்னேன்'' கவிதை, கவிஞர் வேழ வேந்தன் சினிமாக்கதிரில் தீட்டிய கவிதையின் நகல். அவருடைய அசல் அல்ல. இது ஏற்கனவே ''மழலை இன்பம்'' என்ற தலைப்பில் வந்துள்ளன. காப்பியடித்த

நண்பர் இதை அறியார் போலும். இனிமேலாகுதல் காப்பியடித்து பத்திரிகைகளுக்கு இழுக்குத்தேட வேண்டாம்.

3ம் குறிச்சி, கல்முனை — கவிஞர் பூபால்

குறைந்த விலையில் வெளியாகும் வானவில், இளம் எழுத்தாளர்களை முன்னுக்கு வர வழி செய்யவும், இலக்கிய உலகிற்குத் தொண்டு செய்யவும் வாழ்த்துகிறேன்.

கோண்டாவில். — சோ. பூபாலசிங்கம்

வெளிநாட்டு இதழ்களைப் பார்த்து மயங்கி இருந்த நான் வானவில்லின் வர்ணங்களைக் கண்டு வியப்புற்றேன்.

கரவெட்டி. — ஜே. அன்டன் சின்னையா

---

# வானவில் நட்பு மன்றம்

103. எஸ். ஜோஜ் வின்சிலோ
35, மூத்தவிநாயகர் வீதி
நல்லூர்-யாழ்ப்பாணம்.

104. வீ. குமரகுரு
கே. எஸ். இராசையா
கடை வீதி,
நேரியகுளம்.

105. வே. தருமரட்ணம்
581, செல்லமஹால்
ராமநாதபுரம்,
கிளிநொச்சி.

106. சி. தில்லையம்பதி
வித்தனை லேன்,
வல்வெட்டித்துறை.

107. கி. மனோகரி
''ரவி வாசா''
அச்சுக்கூட ஒழுங்கை,
கொக்குவில்.

108. செல்வி,
கந்தசாமி ரகுபதி
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

109. பீ. கந்தசாமி
அரியாலை,
யாழ்ப்பாணம்.

110. சி. ஸ்ரீ மகாதேவன்
யா/கனிட்ட தொழில்
நுட்ப நிலையம்
கொக்குவில்.

111. பொ. மாரிமுத்து
18, பஜார்,
நம்பொடை.

112. பி. ஜோசேப் பீற்றர்
பலாலிச் சந்தி,
மயிலிட்டி.

113. செல்வி, ச. இந்திராணி
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.

114. நா. சண்முகரத்தினம்
மணல் காடு,
காரைநகர்.

115. ப. கிருஷ்ணமூர்த்தி
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

116. இரா. சிவாஜி
534' கஹகொல்ல,
தியத்தலாவ.

117. பொ. பரமசிவம்
24, அம்புகமுவ வீதி,
கம்பளை.

# வானவில்

யாழ்நகர் ஏக விநியோகஸ்தர்கள்,

## தம்பித்துரை அன் சன்ஸ்

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**சலாரான விலையில்!** **தரமான ஓடுகள்!!**

கல்யாணி (குத்துவிளக்கு) சந்திரிகா,
கப்பல், மயில், நூருனி,
செவாறு

மற்றும் பல சிறந்த ரக ஓடுகள்
குறைந்த விலையில் பெறுவதற்கு சிறந்த ஸ்தாபனம்.

## "தேவி ஸ்ரோர்ஸ்"

47, பீச் றேட். யாழ்ப்பாணம்.

போன் : **230**


''வானவில்'' 9. மொம்ஸாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் நிறுவனத்திற்காக ஆசிரியர்கள் கே. மாதவன், பி. எஸ். நாதன் ஆகியோரால் நல்லூர், கண்ணன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. 1-1-71

எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

மகத்தான

# பொங்கல் வெளியீடு.

# ராணி

யாழ்நகர்



ரவிச்சந்திரன் ○ நம்பியார் ○ தங்கவேல்

விஜயஸ்ரீ ○ லட்சுமி

மற்றும் பலர் நடித்த

# ஜீ வ நா டி

சிறந்த குடும்பச் சித்திரம்.

இதமான புகையின்பம் பெற

# ஆர்.வி.ஜி பீடிகளையே

உபயோகியுங்கள்.

போன் : 230 & 231
தந்தி : ஆர்விஜி

47, பீச் ரோட்,
யாழ்ப்பாணம்.